# ஞானபோதினி

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.—திருக்குறள்.

சம்புடம் VI. } 1903௵ மே௴ 20௳ {இலக்கம் 10.

## TAMIL SCHOOLS.

## தமிழ்ப் பாடசாலைகள்.

கிராமந்தோறும் தமிழ்ப் பாடசாலைகள் தொன்றுதொட்டு நடந்து வருகின்றன. கிராமச்சிறுர்கள் இவற்றிற் கல்விகற்றுவருகின்றனர். இவற்றின் சரித்திரத்தை ஆராயுங்கால் ஐம்பது வருடங்கட்குமுன்னர் இப்பாடசாலைகளில் தமிழ் நன்கு பயிற்றுவிக்கப்பட்டதென்பதும் தற்காலத்தில் அத்துணை பயிற்றுவிக்கப்படவில்லையென்பதும் எவரும் அறிந்தவிஷயமே. இதன் காரணம் யாது? தற்காலத்துத் தமிழ்ப்பாடசாலைகளில் வாத்திமைத் தொழில் நடத்துவோர் பெரும்பான்மையும் தமிழறிவு நுட்பங்காணுதவரே. ஆங்கிலேய பாடசாலைகளிற் சில்லாண்டு கற்று ஆங்கிலேயமாயினும் தமிழாயினும் சீர்பெறக் கல்லாமல் உதரவலி ஒழித்தற்பொருட்டுத் திரிபவரே சிறுவர்களுக்குப் போதிக்க வருபவராவர். இவர்கட்கு இலக்கண இலக்கியவறிவு சூனியம். 'சட்டியிலுண்டானுலன்றோ அகப்பையில் வரும்?' பண்டமில்லாத வாசிரியரிடங் கற்கும் மாணவர் எங்ஙனம் பயன்பெறுவர்? அன்றியும், ஆங்கிலம் அரசபாஷையானதனுல் முதன்மைபெற்று, நம் நாட்டு ஆலமரம்போல் தழைத்து விழுதுவிட்டு வலிமையுற்று விளங்கிவரும் இக்காலத்தில் சிறுர் தமி

ழ்ப்பாடசாலைகளில் தங்கும் காலம் சிறிதேயாம். அன்னூர் ஐந்துவய தாகுமுன்னர் ஆங்கிலம் கற்கத் தொடங்குகின்றனர். தமிழ்வாசமும் ஏற்காமல்ஆங்கிலக் கல்வி தொடங்கும் மாணவர் உடல்தேய்ந்து கண் பூத்து மனமிற்று நாளடைவில் யமனுக் குணவாகின்றனர். உலக வறிவும் ஆயுள் விருத்தியும் குன்றிய இவர்களுடைய சந்ததியின் நிலையை நினைப்பிற்பரிதாபமே. மேலும் தமிழ் பயிற்றும் முறை யைக் கவனிக்கப்புகின் வியப்பே. இலகுவாய்ப் பிள்ளைகளுக்குப் பாஷையைக் கற்றுக்கொடுக்கக் கருதித் துரைத்தனத்தார் செய்தி ருக்கும் ஏற்பாடுகள் தமிழ்ப்பாஷைக்கு ஒவ்வாதனவே. முன்னிருந்த தமிழ்ப்பாடசாலை உபாத்தியாயருக்கு ஆங்கிலக்கல்வி கிடையாதாயி னும் தமிழ் இலக்கண இலக்கியத்தேர்ச்சி மிகுதியுமுண்டு. பிள்ளை களும் குறைந்தது பன்னிரண்டு வயதுவரை தமிழ் கற்று வந்தார்கள். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, உலகநீதி, வெற்றிவே ற்கை, குறள், நாலடி, குறவஞ்சி, திவாகரம், நிகண்டு, எண்சுவடி, குழிப்பெருக்கம், தானப்பெருக்கம் இவைபோன்ற நூல்களைப் பயின் றுவந்தனர். எண்ணெழுத்திகழாத இம்மாணவர் பாக்களை வாசித்து அன்வயப்படுத்தி அருத்தஞ்சொல்லவும், கொடுத்தகணக்கை வாயாற் றீரவும் சக்தியுள்ளவராய், லௌகிக அறிவு படைத்தவராய், ஒழு க்கவிழுமிதாக்கொண்டவராய் நன்குமதிக்கப்பட்டு வந்தனர். ஞாபக சக்தி தற்காலத்து வாலிபர்களுக்குப் பெரும்பான்மையுங்கிடையாது. நான்கு பாட்டுச்சொல்ல ஏலாது, சிலேட்டிலாயினும் காகிதத்திலாயி னும் எழுதிப்பாராமல் கணக்கு ஓடாது. இஃதன்றியும்,கற்குங் கால வளவும் சிறிதன்று. தமிழ்ப் பாடசாலை விட்டபின் குறைந்தபக்ஷம் பதினெட்டாண்டு செல்லும் பி. ஏ. பட்டம்பெற. பதினொருவயதில் ஆங்கிலங் கற்கப்புகுந்த மாணவரும் மேற்கூறிய காலவளவிற்கு முன்னரே, அஃதாவது, இருபது வயதில் பட்டம்பெற்று வந்தனர். இருதிறத்தாருக்கும் வித்தியாசம் என்னவெனில், பின்னவர் நீண்ட ஆ யுளும் அறிவுமுதிர்ச்சியும், ஒழுக்கச்செல்வமும், உடற்றிரமும் பெற் றிருந்தனர். முன்னவரோ, ஈப்போல் நைந்தும், கண்ணொளி யிழந் தும், இழைத்தநாள் எல்லையடையாததும், உடலாக்கம் மனவாக்கம் பெறுதும், கைப்பொருளிழந்தும், வருவாய் குன்றியும், தம்மைப் பெற்றூர் தவிக்கவும், தாம்பெற்ற குழவிகள் துடிக்கவும் விட்டொழி

கின்றனர். அந்தோ, பாவம்! இப்பரிதாபநிலை தவிர்த்தல் எங்ஙனம்? துரைத்தனத்தாரும் தமிழபிமானிகளும் தமிழ்ப் பாடசாலைகளை நன்கு பாராட்டுதலினுற் கூடும். இன்ஸ்பெக்டராக ஏற்பட்டிருக்கும் தமிழர்கள் தக்க தமிழ்ப்பாடங்களை ஏற்படுத்தவேண்டும்; தமிழ் கற்பிக்கும் முறை வேறு, மற்ற பாஷைகள் கற்பிக்கும் முறைவேறு என்பதைவற்புறுத்தித் தமிழின் விசேஷங்களை எடுத்துக்காட்டி ஆங்கிலப் போதனுமுறை இதற்குதவாது என்பதை விளக்கவேண்டும்; ஆங்கிலத்தேர்ச்சிமட்டுமன்றித் தமிழுலும் தக்க தேர்ச்சியுடையவரைத் தெரிந்து ஆசிரியராக்கவேண்டும்; அன்னுர்க்குமட்டும் போதனுமுறை பயிற்றுவித்துப் போதகரா யனுப்பவேண்டும்; சர்க்காருதவிப் பொருளையும் பாத்திரமறிந்து படைக்கவேண்டும். இத்தகைய குறிப்புக்களை கவனிப்பரேல், வாத்திமைத் தொழில் முன்போற் சிறக்கும்; மாணவர் மிக்க பயன்பெறுவர்; வாழ்நாள் வீணுளாகாமல் இம்மையிற்றழைத்து, மறுமைக்கும்வித்திடுவர். தமிழபிமானிகாள்! தமிழபிவிருத்திக்கு ஆணிவேர் தமிழ்ப்பாடசாலைகளாதலினுல் அவற்றைக் கண்திறந்துபாருமின்; அவற்றிற்குப் பைதிறந்துதவுமின்; வாக்குச்சகாயம்செய்யுமின்; எவ்வாற்றுனும் சிறுர்கள் தமிழ்த் தாயைப்போற்றவல்ல வழிகளை நாடிக்கொடுமின்.

பத்திராதிபர்.

---

## INDIAN RAILWAYS.

## இந்திய இருப்புப்பாதைகள்.

---

இருப்புப்பாதையைப்பற்றிய ரிபோர்ட்டை ஸ்பெஷல் ரெயில்வே கமிஷனரான மிஸ்டர் ராபர்ட்ஸன் எழுதிமுடித்து இந்தியாகவர்ன்மெண்டாருக்கு அனுப்பியிருக்கிறுரென்றும், அவர் அந்த ரிபோர்ட்டை இந்தியாமந்திரிக்கு அனுப்பியிருப்பதாயும் வார்த்தா பத்திரிகைகளினுல் அறிந்தோமன்றே? இருப்புப்பாதைகளிற் செய்தற்கேற்ற சீர்திருத்தங்களுக்கான சிபார்சுகளடங்கிய அந்த ரிபோர்ட்டு வெளிப்போந்தது. அந்தரிபோர்ட்டிலுள்ள சிபார்சுகளை யுற்றுப்பார்க்கின், மிஸ்டர் ராபர்ட்ஸன் இந்தியாவிலுள்ள இருப்புப்பாதைகளின் ஸ்திதிகதிகளை நன்குணர்ந்து ஆராய்ச்சி செய்தபின்னரே அந்த ரிபோர்ட்டை எழுதி முடித்திருக்கவேண்டு என்று நாம் ஊகிக்கவேண்டியிருக்கின்றது. ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவுறக் காட்டியுள்ளார். கவர்ன்

மெண்டாரும் ஜனங்களும் எதிர்பார்த்திருந்தபடி இந்திய இருப்புப்பாதை களில் இன்ன இன்ன சீர்திருத்தங்கள் செய்த லவசியம், இன்னின்ன மாதிரி செய்தால் இப்போழ்திருக்கும் லாபத்தைக்காட்டிலும் அதிகம் கிடைக்கும், அப்பாதைகளின் வழியாச் செல்லும் பிரயாணிகளுக்கு இன்னின்ன மாதிரி யான சௌகரியங்கள் இருந்தால் நலமாயிருக்கும் என்பதான பற்பல விஷ யங்களையெடுத்து விளக்கிக்காட்டியுள்ளார். இந்த ரிபோர்ட்டு எக்காலத் திற்கும் உபயோகமானது. காட்டு இலாகாவைப்பற்றிச் சிரத்தை யெடுத்துக் கொள்வோரைக்காணேம் என்று நம்மவருட் பலர் நினைத்திருந்தற் கெ திராய் டேராடூனிலுள்ள இம்பீரியல் பாரஸ்டு ஸ்கூலின் டைரெக்டரான மிஸ்டர் காம்பெல் முன்வந்து இந்தியக்காடுகள் சீர்கெட்டுக் கிடக்கின்றன வென்பதான பற்பல விஷயங்களை யெடுத்து ராயல்கலோனியல் இன்ஸடி டியூஷன் சங்கத்தினர் முன் வெகு திறமையர்ப் பேசினதை நமது நேயர் நன்கறிவர். அவரைப்போல் மிஸ்டர் ராபர்ட்ஸனும் தமது ரிபோர்ட்டை வெளியிட்டிருக்கின்றனர். இந்தரிபோர்ட்டின்கணுள்ள சிற்சில முக்கியமான அமிசங்களை இங்கெடுத்துக் கூறுவோம்:—"3-ஆவது வகுப்புப்பிரயாணிக ளின் கஷ்டத்தை நம்மால்கூறமுடியாது; இதைப்பற்றி முறையிடாத வார்த் தா பத்திரிகைகள் கிடையா; எவ்விடம் நோக்கினும் பலவிதத் துன்பங்களுக் குட் பட்டிருப்பவர் மூன்றுவது வகுப்புப்பிரயாணிகளே; ரெயில்வே அதி காரிகள் எப்பொழுதும் முதலாவது இரண்டாவது வகுப்புப் பிரயாணிக ளின் சௌகரியங்களைக் கருதுகிறார்களேயன்றி 3-ஆவது வகுப்பினரைக் கண்திறந்து பார்ப்பதில்லை, ஆயினும் ஜாஸ்தி வரும்படிவருவது 3-ஆவது வகுப்புப் பிரயாணிகளால் தான். இப்படி யிருக்கையில் அவர்களது சௌ கரியங்களுக்கேற்ற ஏற்பாடுகள் செய்வது இருப்புப்பாதை யதிகாரிகளின் முதற்கடமையாகும்" என்று மிஸ்டர் ராபர்ட்ஸன் சொல்லிப், பின்னர் ரெ யில் வண்டிகளின் ஓட்டம் (வேகம்) இவ்வாறு இருந்தால் நலமாகுமென்று அபிப்பிராயப்படுகிறார்: "இந்தியாவில் ரெயில் ஓடவாரம்பித்து ஏறக்குறை ய 50 வருஷங்களுக்கு மேலாகின்றது, இப்பொழுது சாதாரணமாய் இந்தி யாவிலோடும் மெயில் வண்டிகள் மணியொன்றுக்கு 20 மையில்களுக்குக் குறையாமலும் 30 மைலுக் கதிகப்படாமலும் ஓடுகின்றன; இத்தனை வருடங்களாய் ரெயிலோடும்பொழுது பூமி நன்றாய்க் கிடிபட்டு அழுத்தமா யிருக்குமாதலின் மேற்சொன்ன வேகத்தைக்காட்டிலும் இன்னு மதிகமான வேகத்துடன் வண்டிகள் இருப்புப்பாதைகளில் ஓடலாம்; முக்கியமாணலைய ன்களில் (Main lines) இரண்டுமெயில் டிரெயின்கள் ஓடினால் பிரயாணிகளு க்குக் கொஞ்சம் சௌக்கியமாகு"மென்று அவர் கூறுகிறார். ரெயில்வே கட்ட ணங்களைப்பற்றிக் கூறுகையில் "இங்கிலண்டிலுள்ள இருப்புப் பாதைகளுக் கும் இந்திய இருப்புப்பாதைகளுக்கும் வெகுதாரதம்மிய மிருக்கின்றது; இங் லண்டிலிருப்பதைக் காட்டிலும் இங்கு 6 மடங்கு அதிகமாகக் கட்டணங்

செலுத்த வேண்டியதாயிருக்கின்றது ; இருப்புப்பாதைகளின் கம்பெனியார் அல்லது சிப்பந்திகள் முதலியவர்களது அஜாக்கிரதையினால் ஜனங்களது சாமான்கள் சேதமாயின் அதற்கு ரெயில்வேயாரே உத்தரவாதஞ் செய்ய வேண்டும்" என்றும், மிஸ்டர் ராபர்ட்ஸன் சொல்லுகிறார். அனேகமாய் இந்திய இருப்புப் பாதைகளில் உயர்ந்த உத்தியோகத்தி லிருப்பவர் வெள்ளையரேயாவர், அவர்களுக்கு அதிகமாய்ச் சம்பளங் கொடுத்து வைத்திருப்பதனால் நம்மிந்தியருக்குக் கஷ்டமே யொழிய சுகமொன்றுமில்லை. வெள்ளையரைப்போலத் திறமை வாய்ந்தவர் நம்மவரில் எவருமிலரோ ? இன்னு மதிகச்சம்பளங் கொடுத்து வெள்ளையரை ரெயில்வே சிப்பந்திகளுள் உயர்ந்தவராய் நியமிப்பதனாலும், அவர்கள் நந்தேயத்துக் குடிகளின் சுகதுக்கங்களை யறிந்து அவர்களுக்குத் தக்கபடி நடவாததனாலும், இந்திய ரெயில்வே சிப்பந்திச் செலவு வெகு அதிகமாயிருக்கின்றது. சக்தியம் திறமையுள்ள இந்தியச் சிப்பந்திகள் குறைந்த சம்பளத்துக்கு ரெயில்வே இலாகாவுக்கு வரும்பொழுது அதிகச்சம்பளங் கொடுத்து அன்னியர்களை நியமித்தபின், சிப்பந்திச்செலவு அதிகமாயிற்றே, என்று முறையிடுவதில் யாது பயன் ? கர்ஸன் பிரபுவைப்போன்ற இராஜப்பிரதிநிதியின் ஆட்சியில் இவைகளுக்கான ஏற்பாடுகளனைத்தும் செய்யப்படுமென்றே எண்ணுகிறோம். லண்டனிலிருக்கும் ரெயில்வே போர்டுகளிலுள்ள மெம்பர்கள் 3-மாதங்களுக் கொருமுறையோ, 6-மாதங்களுக் கொருமுறையோ, இந்தியாவுக்குவந்து ஆங்காங்குள்ள ரெயில்வே சீர்திருத்தங்களைப் பார்த்துச் சென்றால் எல்லாம் நன்கு விளங்கும். பிரயாணிகளேறிச் செல்லும்வண்டிகளின் வேகம் அதிகரித்தல்; ஒவ்வொரு தினத்திலோடும் மெயில்வண்டிகள் (through trains) ஒன்றுக்கதிகமிருத்தல் ; பொதுவாய் மூன்றாவது வகுப்புப்பிரயாணிகளின் சௌகரியத்தை யொட்டி யின்னுமிரண்டு வண்டிகளைச் சேர்த்தல் ரெயில்வே சிப்பந்திகள் மூன்றாவது வகுப்பினரைக் கீழானவரென மதித்து இழிவாய் நடத்தாதிருத்தல் ; அனேக ஸ்டேஷன்களில் சுதேசிகளுக்கான சாப்பாட்டு விடுதிகளைக் கட்டுவித்தல் ; டிரெயின்களிலேயே சாப்பாட்டு வசதிக்கேற்ற வண்டிகள் அமைத்தல் ; டிக்கட்டு ஆபீசுகள் எப்பொழுதுந் திறந்திருத்தல் ; பிரயாணிகளுக்கும் கார்டுகளுக்கும் தத்தம் வண்டிகளிலிருந்து பேசிக்கொள்ளும்படியான வசதியமைத்தல் ; மின்சாரத்தைக்கொண்டு வண்டிகளுக்கு இன்னுமதிக விளக்குகளேற்றல் ; ரெயில்வே கட்டணங்களைக் குறைத்தல் ; கூலிகள் முதலாயினோர்க்குக் குறைந்த சார்ஜுள்ள டிக்கட்டுகள் கொடுத்தல் ; ஆகிய இவைகள் மிஸ்டர் ராபர்ட்ஸனுடைய ரெயில்வே சீர்திருத்தச் சிபார்சுகளுட் சிலவாகும். இதனால் நமக்குத் தோற்றுவதென்னை? ரெயில்வே டிபார்ட்மெண்டை அவர் வெகு நுட்பமா யறிந்தாராய்ந்திருக்கின்றனர். இவர் விதரித்துக் காட்டியுள்ள இத்தனை சிபார்சுகளையும் கவர்ன்மெண்டார் எப்பொழுது தமது யோசனையி லெடுத்துக்கொள்வரோ

தெரியவராது. யூனிவர்ஸிடி கமிஷன், நீர்ப்பாய்ச்சல் கமிஷன், போலீஸ கமிஷன் முதலான பற்பல கமிஷன்களை யேற்படுத்திய நமது கர்ஸன் பிரபு, இந்திய இருப்புப்பாதைகளைச் சீர்திருத்திப்போவாரென்றே நம்புகின்றோம். இப்போழ்து வெளிப்போந்த மிஸ்டர் ராபர்ட்சனின் ரெயில்வே ரிபோட்டிற் கண்டபடி இருப்புப்பாதைகளின் சீர்திருத்தங்களைப்பற்றிய சுபார்சுகளை நமது இராஜப்பிரதிநிதி கவனித்து அவைகளுக்கேற்ற ஏற்பாடுகளைச் செய்தால் ஜனங்களுக்குள்ள ரெயில்வே தொந்திரவும் ஒருவாறு அடங்கும், கர்ஸன் பிரபுவின் ஞாபகமும் எந்நாளும் நம்மவர் மனத்திற் குடிகொண்டிருக்கும்.

ல. அ.

---

## WELL IRRIGATION.
## கிணற்றுப் பாய்ச்சல்.

---

சென்னப்பட்டணம் சித்திரகலாசாலைத் தலைவரான சாட்டர்டன் அவர்கள் நந்தேசத்திற் பொருட் பெருக்க முண்டாவதற்கான வகைகளைத் தேடி யுழைத்து வருகின்றார். இவரது நன்முயற்சியினால் விவசாயிகளும் கைத்தொழிலாளிகளும் மேன்மையடைவார். இவர் இதுவரை 'அலுமினியம்' என்று சொல்லப்பட்ட படிக்கார ஸத்தைகொண்டு பாத்திரசாமான் செய்து அவற்றைவழக்கத்திற்குக் கொண்டுவருவதற்காகப் பாடுபட்டு வந்தவராவர். இம்முயற்சியினால் இங்கு அநேகக் கைத்தொழிலாளிகளுக்குப் பிழைப்புண்டாயிற்று. இவ்வாறு இனிச் சீக்கிரகாலத்தில் இவர் விவசாயச் சீர்திருத்தமும்செய்து நற்கீர்த்தி கொள்வரென்று நம்புகிறோம். இத்தேசத்து ரயத்துகள் செய்து வரும் விவசாயத்தொழில் இன்னும் பாமரத்தனமாய் நடந்து வருகிறதென்றும் அதனைச் சீர்திருத்தி நன்றாய் நடத்தலாமென்றும் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இவர்கள் என்ன சொல்லினும், சீர்திருத்தத்தின் பிரயோசனமின்னதென்று அநுபோகத்தில் ருஜுப்படுத்தாதவரை நமது ரயத்து எத்தகைய மாறுபாட்டுக்கும் இணங்கான். விவசாயசம்பந்தமாய் நாம் சீர்திருத்தர கவனிக்கக்கூடிய விஷயங்கள் பலவுள. அவற்றுள், பற்பலநிலங்களின்பூஸாக் நிலைமைகள், நீர்ப்பாய்ச்சல் முறைகள், எருக்களின் குணாகுணங்கள், வெவ்வேறு இடங்களுக்குரிய அனிலோற்பன்னஸ்திதிகள் (வானத்து விசேஷங்களைக்காட்டும் நிலைமைகள்), தானியவித்துக்களைச் செவ்வையாக்குதல், உழவு மாடுகளைத் தேற்றுதல், புறத்தேயத்துப் பயிர்களை இங்குச்செழிக்கச்செய்தல், முதலியன முக்கியமான அமிசங்களாம். இவை யொவ்வொன்றையும் நாம் ஆத்திர விசாரிக்க வேண்டியது அவசியமே யெனினும், நீர்ப்பாய்ச்சல் விஷ

யமானது மிகவும் அவசரமாய்க் கவனிக்கத்தக்கதாகும். கிணறுகளில் ஏற்றம்போட்டுத் தண்ணீரிறைத்துச் சாகுபடி செய்வதினும் குளங்கள், கால்வாய்கள் முதலியவற்றி லிருந்துபாய்ச்சுவது சுலபமானதன்றோ? சரீரப்பிரயாசையைக் குறைப்பதற்கான யந்திர சாதனங்களை அமைத்துக்கொள்வது நன்மையேயென்றாலும், விவசாயிகளிற் பெரும்பாலார் ஏழைக்குடியானவர்களா யிருப்பதை ஆலோசிக்கவேண்டும். அவர்களுக்குச் சாதாரணமாயுள்ள காணி இரண்டொரு ஏகரா பூமியேயாகும். பட்டாக்களின் கணக்கை யெடுத்துப் பார்க்கின், ஒவ்வொருவனுக்குச் சராசரி பத்து ரூபாய் ஆஸ்தி கூட இல்லை. இஃது இப்படியிருக்க, இறைப்பதற்கு மாடுகளைக்கட்டி யடிப்பதைவிட எண்ணெயினாலியக்கப்படும் ஜல சூஸ்திரங்களை யுபயோகிப்பது செலவுக் குறைவெனினும், அந்த ஜல சூத்திரங்களின் கிரயம் அதிகமாயிருத்தலின் ஏழைக்குடியானவனுடைய சக்திக்கு மீறியிருக்கின்றது. கிணற்றுப்பாய்ச்சல் மிருந்துள்ள இடங்களில் ஒரு கிணற்றினால் அரை ஏகரா முதல் மூன்று ஏகராவரை சாகுப்படி செய்யலாம்; அதிகமாயின் ஐந்து ஏகராவுக்கு மேல்ஓடாது. ஒருகிணறு வெட்டுவதற்கு அந்தந்த இடங்களுக்குத் தக்கபடிஐம்பதுரூபாய்முதல் ஐந்நூறு ரூபாய் வரை பிடிக்கின்றது. ஒருகிணற்றுப் பாய்ச்சலுக்குள்ளடங்கிய நிலத்தில் ஒரு சாதாரண குடும்பமும் இரண்டொரு ஜதைமாடும் உழைத்தாற்போதும்; இவர்களுக்குப் போதுமான வேலை அதிலிருக்கின்றது. இந்தக் குடும்பத்துச் சம்ரக்ஷணைக்கும், துணிமணிகளுக்கும் சுபாசுப காரியங்களுக்கும், வரிகளுக்கும், மாடுகளின் போஷணைக்கும், எருவுக்கும், கருவிகளைப் பழுது பார்ப்பதற்கும், நிலத்தைச் சீர்திருத்துவதற்கும் வேண்டியபணம் அந்தச் சிறுதுண்டு நிலத்திலிருந்து உற்பத்தியாகவேண்டும். கிணற்றுப்பாய்ச்சல் சரிவர நடக்கவேண்டுமாயின் அதனில் நீர்வற்றாம லிருக்கவேண்டும். சில விடங்களில் மாத்திரமே முப்பது நாற்பது ரூபாய்ச் செலவில் செங்கல் அல்லது கொடிக்கூண்டு முதலிய சுலபமான சாமான்களைக்கொண்டிணைத்து ஆறுமுதல் பத்தடி ஆழமுள்ள சிறு கிணறுகள் தோண்டி, அந்த ஜலத்தை ஐந்து ஏகராவரை பாய்ச்சி ஒரு சமுசாரம் பிழைப்பதற்கு இடமுண்டாகிறது. எல்லா இடங்களிலும் இப்படி அமையாது. ஒரு குடும்பத்திற் சாதாரணமாய் ஐந்துபேர் இருக்கிறார்கள். ஒருஜதை மாடுகளுக்குத் தீனிச்செலவு மாதமொன்றுக்கு 25, 30 ரூபாய் ஆகுமென்றும், அதைவிட எண்ணெயினாலியக்கப்படும் ஜல சூத்திரத்திற்குச் செலவு அதனிற் பாதியாகுமென்றும் மிஸ்டர் சாட்டர்டன் நினைக்கிறார். புல், வைக்கோல் முதலியன தன் நிலத்திலே கிடைப்பதனால் மாடுகளுக்கு அவ்வளவு செலவு பிடிக்காது. ஆகையால், ஏழை ரயத்து மிகுந்த பணச்செலவிட்டு நாணயமான ஜலசூஸ்திரங்களை வாங்கினால் அவைகளை யுபயோகிக்கத் தெரியாமல் அவஸ்தைப்படுவதன்றி அவனுக்கு செலவும் அதிகப்படும். ஜமீன்தாரர்களும் பெரிய மிராசுதாரர்களும் யந்திரங்களை வாங்கி யுபயோகிக்கலாம்; ஆனால் அப்படிச்

செய்யுமிடத்து இதுவரை கூலிவேலை செய்து பிழைத்து வந்த ஏழைக் குடிகளுக்குப் பிழைப்பு குறையுமன்றே? 'கன்னுன் நடமாடக் குயவன் குடிப்போனான்,' என்றதுபோல், யந்திரங்கள் நடமாடக் கைக்களவர் தம் கைசவுத் தொழிலைவிட்டு ஊர்துறந்து ஒழிவாராயினர். அப்படியே ஏழைக் குடியானவரும் கூலிவேலைகளை நாடிச் செல்லவேண்டிவரும். இந்திய விவசாயிகளுக்குள்ள அனுனுகூலங்களாவன:—1. ஒருவரோடொருவர் ஒத்துழைக்கும் நாட்டமில்லாமை, 2. பரஸ்பரநம்பிக்கைக் குறைவு, 3. தொன்மை வழக்கத்தை யனுசரிப்பதிற் சோராப்பற்று, 4. ஏழைமை, 5. கட்டுதிட்டங்களமைத்து வேலைசெய்து சாதிக்குந் திறமையின்மை முதலியனவாம்! ஆதலின், ஒவ்வொருகுடும்பமும் தனித்ததோர் உலகமாகும்; அதனதன் சுகாசுகம், காணி, வரும்படி, நன்மைதீமை முதலியன அதன் மட்டோமேயாகும். பாமரஜனங்கள் கல்விப்பயிற்சி மேலிட்டுப் பலவகை விவசாயமுறைகளையறிந்து ஒப்பிட்டுப்பார்த்து ஒருவரோடொருவர் ஒத்துக் கலந்துழைக்கவும், புது முறைகளைத் தீர்க்கமாய்அனுட்டிக்கவும் சக்தி யுள்ளவர்களாகும்வரை, இப்போழ்துள்ள விவசாயமும் சீர்திருந்தாதென்னலாம். இந்தியர்களின் நிலைமையைச் செவ்வைப்படுத்தக் கருதினுல் பாமரர்களுக்கு நூன் முறைகளிலும் கைத்தொழில் வேலைகளிலும் பயிற்சியுண்டாக்குவது அவசியம்; ஆங்காங்குப் புதியமாதிரியானவிவசாய முறைப்படி பயிரிட்டுக்காட்ட ஏற்பாடுசெய்யவேண்டும்; யந்திரங்கள், ஸத்துக்கள், தத்துவப்பொருள்கள் முதலியவற்றின் உபயோகங்களையும் பிரயோகங்களையும் விளக்குவதற்கான வஸ்து சோதனைச்சாலைக ளமைக்கவேண்டும். இங்ஙனம் நடந்தேறுவதற்கு, ஜர்மனிதேசத்திலுள்ளதுபோல் இத்தேசத்திலும் துரைத்தனத்தார் தம் செலவில் ஜனங்களைப் படிப்பிக்கவேண்டும்.

தி. அ. சு.

---

## AESOP'S FABLES.

## கட்டுக்கதைகள்.

### VIII. காக்கையும் ஆடும்.

---

ஒரு நாள் ஒரு காக்கை ஓராட்டின் முதுகின்மேலுட்கார்ந்து கரைந்தது. அந்த ஆடு "ஐயோ! நீ இந்தமாதிரி ஒரு நாயினிடம் செய்யத்துணிய மாட்டாய்!" என்று காக்கையினிடம் உரைத்தது. அதுகேட்ட காக்கை "யான யாரிடம் இவ்விதம் செய்யலாமென்றுணர வல்ல புத்தி எனக்குளது. சண்டையில் குணத்தவரிடம் நான் என்றாற் கூடியவளவு சாதுவாயிருப்பேன். குறும்பு, வம்பு முதலியவற்றிற்குத் தாழ்ந்து செல்வோரை என்றாற் கூடியவளவு வருத்துவேன்" என்றது.

நீதி:—ஊக்கமின்மை ஒருவரிடமும் நட்புக்கொள்ளாது.

"ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை.

"உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு."—

திருக்குறள்.

அமைக்குமாறு:—அவமானத்தை இழிவாய் ஏற்றுக்கொள்ளல் மிக்கபே தைமையாம்; இழிந்தமனிதர் தன்னைத் துன்புறுத்துதலையும் தூஷித்தலையும் வேண்டாதான் ஒவ்வொருவனும் தனது மேன்மையின்கட் கருத்தாயிருத் தல் வேண்டும். எளியவர்களை அவமானம் பண்ணச்சன்னத்தனும் வல்லாள ருலடங்குவோனு மாகுமோர் வாயாடியைக் காக்கை பெரிதும் ஒக்கும் இக்கதையை மனிதருக்கு அமைப்பதினும் ஒருவேளை இராஜாங்கத்துக் கமை த்தலே நேராகலாம். இராஜ்யங்களுக்கு இதை அமைத்தறியும் போது, நேர்த்தியானதாகும். தளர்ந்து, ஆயுதமில்லாமல் வலியற்ற இராஜாங்கத் தோடிருக்கும் ஒரு ஜாதியார் ஏனைய ஜாதியார் நினைத்தபடி தம்மைத்துன் புறுத்தி அவமானஞ்செய்தற்கு இடமாகின்றனர். இதைப்பற்றி ஒரு பழமொ ழியும் வழங்குகின்றது:—'போரை நீக்க முயல்வோன் அது புரியச்சன்னத்த னுதலும் வேண்டும்'. தந்நயங்கருதிய மூடர்களே 'எவ்வளவாயினுங் கொடுத் துச் சமாதானஞ்செய்க, என்பர். 'வலிந்து சண்டைக்குப் போவதில்லை, வந்த சண்டையை விடுவதில்லை' என்பதே தமிழ்மக்கள் சட்டுரையாம்.

நறையி னின்ப நாடொறுங்
குறைப டாது கூடிட
வுறுதி கொள்ளு முள்ளமாற்
கறுவி நிற்குங் கைகளே.

"இன்பம் விழைபான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்."—

திருக்குறள்.

## IX. கிணற்றில் விழுந்த குள்ளநரி.

---

ஒரு கிணற்றில் விழுந்ததோர் குள்ளநரி தந்திரமொன்று செய்தது; தன் நகங்களைக் கிணற்றின் இருபக்கங்களிலும் ஊன்றித் தலையைத் தண் ணீர்க்குமேலே நிறுத்திக்கொண்டது. சிறிதுநேரத்திற் கெல்லாம் ஓரோ நாய்வந்து ஓரத்தில் எட்டிப்பார்த்ததும், நரி தான் தப்பிக்கொள்வதற்குக் கயி றொன்றுதந்து உதவும்படி அதனை மிகவுங் கெஞ்சிக் கேட்டுக்கொண்டது. ஓநாய் "ஐயோ! எளிய நரியே! உனக்காகயான் மனமார விசனப் படுகின்

றேன்! இந்தத்துக்ககரமான நிலையில் எப்படி நீவந்திருக்கக்கூடும்?" என்று அதன் துரதிர்ஷ்டத்தைக் குறித்திரங்கிக் கூறிற்று. அதுகேட்ட நரி, "நண்பா! அப்படியன்று; யான் நல்ல நிலையிலிருக்க விரும்பினையானல், என்னைப் பார்த்து இரங்கிக்கொண்டே நில்லாதே; சீக்கிரத்திலெனக்கு ஏதாவது உதவிசெய். மோவாய்க் கட்டைவரையில் தண்ணீரிலாழ்ந்த ஒருவன் முழுகிப்போவதற்கு மயிரிழை யிருக்கும்போது இரக்கப்படுவதனுல் யாதுபயன்? அது சுவையற்ற ஆறுதலே." என்று கூறிற்று.

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவத நட்பு."—

திருக்குறள்.

நீதி:—நற் சொற்களைச் சொல்லல் நன்று. ஆனல் நற்செய்திகளைச் செய்தல் அதனினும் நன்றும்.

"சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்"—

திருக்குறள்.

அமைத்துமாறு:—சிநேகிதருடைய துரதிர்ஷ்டத்தைக் கண்டும், அவற்றை நீக்கமுயலாமல் அவற்றிற்காக இரங்கிப்பேசுதல் துக்கமானதோர் ஆற்றுமாறும். ஒரு சிநேகிதன் சகோதரனைப்போலக் கஷ்டகாலத்தி லுதவுவதற்கே பிறந்திருக்கின்றான். உண்மைநேசத்துக் கறிகுறி ஆபத்து வேளையே.

"கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்."—

திருக்குறள்.

ஒரு கிரேக்க தத்துவ நிபுணர் சொல்லுகிறார் 'உண்மை நேசர்களுக்கு நமது ஆகூழ்க்காலத்திற் கூப்பிட்டபோது வந்துபார்ப்பதும், போகூழ்க்காலத்தில் தாமாகவே வருவதும் வழக்கமாம்' என்று. இனிய வார்த்தைகள் நல்லவைதாம். ஆனல் அன்புள்ள செயல்கள் அவற்றினு நல்லனவாம்.

"கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும்."—

திருக்குறள்.

ஒருவருக் கொருவ ருதவுக வென்பதே
யொருபெருங் கடவு ளுரைத்த வாணையாம்.

"காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர் - ஏலா
இடரொருவ ருற்றக்கா லீர்ங்குன்ற நாட
தொடர்புடையே மென்பார் சிலர்."—

நாலடியார்.

## X. ஒருபையனும் அவன்தாயும்.

பள்ளிக்கூடத்துப் பையனொருவன் மற்றொரு பையனிடத்திருந்து தான் திருடிக்கொணர்ந்த புத்தகமொன்றைத் தன்தாயினிடம் கொடுத்தான். அவள் அவனைத் திருத்தவெண்ணாது இத்தீத் தொழிலுக்காக உவந்து அவனைத் தைரியப்படுத்தினாள். அவனுக்கு வயது ஆகவாக அதிக விலைபெறுவனவற்றையும் விடாமல் திருடிக்கொண்டு வந்தான். கடைசியில் அகப்பட்டுக்கொண்டு நியாயாதிபதியி னெதிரே கொண்டுவரப்பட்டான். நியாயாதிபதியும் அவனுக்குக் கொலைத்தண்டனை விதித்தார். அவன்தாயும் கொலைசெய்யுமிடத்துக்குப் போயிருந்தாள். அப்போது அவன் தன்தாயிடம் இரண்டோர் இரகசியவார்த்தைகள் பேசுவதற்குக் காரியஸ்தர்களிடத்திநின்று உத்தரவு பெற்றுக்கொண்டு இரகசியம்பேசுகிறவன்போல அவள்காதினிடம் தன்வாயைக்கொண்டுபோய் அவள்காதை ஒட்டக்கடித்துவிட்டான். இவ்விதஞ் செய்தபிறகு, "நல்ல சனங்களே! அவமானம், வெட்கம், தண்டனையாகிய இவற்றிற்கு யானொரு திருஷ்டாந்தமாயிருப்பதைப் பார்க்கின்றீர்கள். ஆனால் இந்தத்தாயே என்னை இந்நிலைக்குகொண்டுவந்தவள். யானொரு பையனாயிருந்தபோது திருடியபுத்தகத்துக்காக என்னைச்சவுக்கிட்டடித் திருப்பாளானால், யான் இப்போது, மனிதனாகத் தூக்குமரத்துக்கு வந்திருக்கமாட்டேன்" என்று ஓலமிட்டான்.

நீதி:—கோலைமறைத்துக் குழந்தையைக்கெடாதே

அடியாதமாடுபடியாது

"இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து."—

திருக்குறள்.

அமைக்குமாறு:— கெட்டநடவடிக்கைகள் ஆரம்பத்திலேயே திருத்தப்படல்வேண்டும்; களைப்புல்லைப் பார்த்தபோதே நாம் களையவேண்டும். பெரிய குற்றமொன்றுக்காக ஒரு குழந்தையைத் தண்டியாதுவிட்டுவிடல் பெருங்கேடு பயக்கும்; தன்மகனைத் தீயவழியில் விடுகிற மதிகெட்டதாய் தன்மகன் பிற்காலங்களில் அநுபவிப்பதற்காகத் துன்பம் பயிர்செய்கிறாள். இக்கதையிற் போந்ததாய் அடைந்தாற்போல, அவளும் திருந்தாத பழகாத மனத்தினின்று செய்ந்நன்றி மறத்தலாகிய விளைச்சலை அறுக்கவெண்ணலாம்.

கல்வியே யிளமனம் பாது காப்பதாம்
ஒல்குசெஞ் செடிநிலை யுற்ற போழ்திலே
மல்குற வளைத்தக்கால் வளைக்க லாமன்றி
வன்மர மானபின் வளைக்க லாகுமோ?

'விளையும்பயிர் முளையிலே'

## XI. ஓநாய்களும் ஆடுகளும்.

வெகு நாட்களாய் ஓநாய்களும் ஆடுகளும் சண்டையிட்டுக்கொண்டேயிருந்தன. பின்பு ஒரு காலத்திற் சண்டையை ஒருவாறாக ஒழித்துச் சமாதானஞ் செய்ய வெண்ணின. இச்சமாதானத்துக்குப் பிணையும்கொடுக்கபடல் வேண்டுமென்று ஏற்பட்டது. ஆடுகள் தங்கள் காவல்நாய்களைத் துரத்திவிடல்வேண்டும்; ஓநாய்கள் தங்கள் சிறிய குட்டிகளைத் தரவேண்டும். இதற்கு இருதிறத்தாரும் ஒத்துக்கொண்டு இதன்படி நடக்க ஆரம்பித்தவுடனே சிறிய ஓநாய்கள் தங்கள் தாய்மார் வருவதற்காக அலறின. பெரிய ஓநாய்கள் சமயத்தை விட்டுவிடாமல், 'சமாதானங் கலைந்துவிட்டது' என்று கூவி யெழுந்தன; இவ்விதமாய் அன்பாய்க்காக்கும் நாய்களை விட்டுப்பிரிந்த ஆதரிவற்ற நிலையிலிருக்கும் ஆட்டு மந்தையினூடே வீழ்ந்து பாய்ந்துகொன்று நினைத்தவண்ணம் அவ்வோநாய்கள் தின்றன.

நீதி:—நல்ல காவல் தீமையை விலக்கும்.

அமைக்குமாறு:—இக்கதையின் பொருள் ஒரு சரித்திர சம்பவத்தால் நன்கு விளங்கும். மாசிடன் என்னுந் தேசத்தரசனுன பிலிப் என்றவன் தான் பேரவாக் கொண்டெண்ணியவற்றிற் கெல்லாம் எதிரியாய் நின்ற டெமாஸ்தினிஸ் என்பவரைத் தன்னிடம் கொடுக்கும்படி அதீனியர்களைக் கேட்டுக்கொண்டபோது, காவலராகிய டெமாஸ்தினிஸ் அவர்கள் கூட்டிய பொதுஜனக்கூட்டத்தில் இக்கதையைச் சொலி அவர்களை அக்கேள்விக்கு மறுத்துவிடும்படி செய்துவிட்டனர். அவர் இவ்விதமாய்ப் பொதுஜன நாவலர்களைக் கொடுத்துவிடுவது இராஜாங்கத்துக்காவல் நாய்களைக்கொடுத்துவிடுதலாமென்று உறுதி கூறினர். விழிப்புடைமை, நடந்துகாட்டல், முக்கிய நகரவாசிகளிற் பொதுஜனவூக்கம், அரசன் அபகரிக்கும் தொழிலைத்தடுத்து ஜனங்களின் பேதைமையை அடக்குதலில் எல்லாருக்கும் உள்ள ஆசை, ஆகிய இவைதாம் ஒரு ஜாதியார் நன்ருயிருப்பதற்கு இன்றியமையாதன. ஜனசமூகத்தின் பாதுகாப்பின்பொருட்டும், நல்லாட்சியின் பொருட்டும், முற்காலத்து அறிவுடையோர் வகுத்த சட்டதிட்டங்களை நிலைநிறுத்துவதனுலுண்டாகும் பயன் இஃதென இக்கதை கற்பிக்கின்றது.

தன்னலட்டிற் காட்டலே சால்புடைய சட்டமாம்
மன்னுயிர்க ளஃதே மதித்துவந்து கொள்ளுமால்.

(இன்னும் வரும்,)

ம. சு. கோவிந்த சிவன்.

# VILASAVATI.
# விலாஸவதி.

## முதல் அத்தியாயம்
### யோகீசுவரன்.

தண்டகாரண்யத்தின் வடதிசையில் நெடுந்தூரத்தில் நீலாசலம் என்னும் மலையின் தாழ்வரையில் தர்மபுரியென்றொரு கிராமமிருந்தது. அங்கு இக்கதையின் காலத்தில் இரண்டுமூன்று வேதியர் இல்லங்கள்மாத்திரமிருந்தன. ஜனங்கள் பெரும்பான்மையும் வாணிபர்களாயிருந்தார்கள். தர்மபுரிக்கு ஒருகாதவழி தூரத்தில் ஒரு சந்தைகூடுவது வழக்கம். அச்சந்தையில் எண்ணெய் விற்பதே அவர்களது நித்தியஜீவனமாயிருந்தது. தர்மபுரியிலிருந்து ஒருநாட் பயணத்திற் செல்லக்கூடிய ஒருபெரிய பட்டணத்திற்கு அந்தத்தர்மபுரியின் அருகிலிருந்து பெரியவொருமார்க்கமிருந்தமையால், அஃதோர் குக்கிராமமாயினும் அங்குத் தினந்தோறும் இரண்டுமூன்று வழிப்போக்கர்கள் எங்கிருந்தாயினும் வந்துசேர்வார்கள்.

ஒருநாள் அஸ்தமனவேளையில்பத்து நாழிகைக்கு ஒரு விப்பிரன் வழிநடந்துகளைத்து தர்மபுரி அடைந்து அங்குள்ள துர்க்காலயத்தின் முன்னுள்ள ஆலமரத்தடியில்வந் துட்கார்ந்தான். சிறிதுநேரம் அவன் அங்கிருந்துஇளைப்பாறியிருக்கையில் வேறொருவர் அதேயிடத்துக்குவந்து சேர்ந்தார். அவரைக்கண்டால் ஒரு யோகீசுவரரென்று தோன்றும். அவர் பீதாம்பரம் அணிந்து, வேறொரு வஸ்திரத்தினால் சரீரம் நன்றாய் மறையத்தக்கவண்ணம் மூடிக்கொண்டு அதன்மேல் மான்தோலுந் தரித்திருந்தார். கழுத்திற் கட்டித் தொங்கவிட்ட ஒருசிறிய பாத்திரமும், கையில் ஒரு தண்டமும் அவருக்கலங்காரமாயிருந்தன. பெருத்த ஜடாபாரத்தைத் தன் உத்தமாங்கத்தின் முன்பக்கத்தில் சேர்த்துக்கட்டி மூடித்திருந்தார். அடர்த்தியாய் வளர்ந்திருந்த அவரது தாடியில் இங்குமங்கும் அபூர்வமாய் ஒன்றிரண்டு நரைமயிர்கள் காணப்பட்டன. நீண்ட சரீரவடிவமுள்ள அவரது இலக்ஷணம்பொருந்திய முகமும், அகன்றமார்பும், வன்மைமிக்க புயங்களும், ஒளிவீசும் கண்களும், மேனியின் சோதியும், மற்றும் கண்டால் அவர் சாமான்ய மனிதரல்லரென்றுடனே தோன்றாமலிராது. இத்தகைய லக்ஷணமுள்ள யோகீசுவரரும் அந்தமண்டபத்துக்கேவந்து சேர்ந்தார். துர்க்காலயத்திற்குள் தரிசனஞ்செய்யும்பொருட்டுச் சென்றிருந்த சிலர் தவிர அங்கே வேறெவரும் சமீபத்திலில்லை. மறையோன் யோகீசுவரரைக் கண்டபொழுது மிகவும் ஆச்சரியமுற்றானாயினும், யோகீசுவரர் மௌன விரதமுள்ளவரா யிருக்கக்கூடுமென்று சங்கித்து ஒன்றும் கேட்டானில்லை. சிறிதுநேரம் பொறுத்து யோகீசுவரரே சம்பாஷிக்கத் தொடங்கினார்.

யோகீசுவரர்:—தாங்கள் எவ்விடத்தினின்று வருகிறீர்கள், எவ்விடம் இப்பொழுது போகின்றீர்கள் என்றறிய எனக்காவலாயிருக்கின்றது.

பிராமணன்:—யான் அவந்தி ராஜ்பத்திலிருந்து இப்பொழுது வருகின்றேன். சிலகாலமாய்ச் சஞ்சாரத்தி லிருக்கின்றேன். தாங்கள் இன்னாரென்று யான் அறியலாமோ?

யோகீசுவரர்:—யானும் தங்களைப்போலவே ஒருயாத்திரிகன்தான். இப்பொழுது சிலகாலமாய் ஓரிடத்திற்றங்கி ஸ்திரமாயிருந்துவருகின்றேன். தங்களைக்கண்டபொழுது விசேஷ வர்த்தமானங்கள் ஏதாவது தெரிந்துகொள்ளலாமென்றுகருதி தங்களை வினவினேன். சேதிராஜ்பத்திலாயினும் அதற்கிப்புறமாயினும் விசேஷசமாசாரங்கள் ஏதாவது தங்களுக்குத் தெரியுமோ? சிலகாலஞ்சென்றபிறகு அவ்விடங்களுக்குப் போகவேண்டுமென் றிருக்கின்றேன்.

பிராமணன்:—அவந்தி தேசத்துப் பெரிய ராஜா வானப்பிரஸ்தன் ஆய்விட்டதாகத் தெரியவருகின்றது. அவ்வரசனுடையசிமேர்த்த புத்திரனுக்கு பட்டாபிஷேகம் நடந்தது அங்கே நான்சென்றிருந்த பொழுது; பின்னால் விசேஷங்கள்—விசேஷங்கள் ஒன்றுமில்லை யென்பதற்கில்லை. களிங்க ராஜாவின் புத்திரனுக்கு விவாகம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்களென்றோ அல்லது நிச்சயமாயிருக்கின்றதென்றோ ஒருவர்த்தமானம் கேள்விப்பட்டேன்.

யோகீசுவரர்:—நிச்சயமாய் விட்டதோ? தாங்கள் என்ன கேள்விப்பட்டீர்கள்?

பிராமணன்:—அது எனக்கு நிச்சயமாய்த் தெரியாது. அந்தப்பிரதேசத்தில் இராஜகுமாரனுக்கு விவாகம் சமீபித்திருக்கின்றதென வொரு வதந்தி யுண்டாயிருக்கின்றது. யான் இங்கிருந்து போகப்போகின்றமையால் அதை விவரமாய் விசாரிக்க வேண்டுமென்ற ஆவசியகம் எனக்கில்லை.

யோகீசுவரர்:—வேறே விசேஷச் செய்திகள் ஒன்றுமில்லையோ?

பிராமணன்:—வேறெதுவுங் கேள்விப்பட ஞாபகம் எனக்கில்லை.

இவ்வாறு பிராமணனும் யோகீசுவரரும் தங்களுக்குள் சிறிது நேரம் கூடி உரையாடிய பின்னர் பிராமணன் ஸ்நானஞ்செய்யும்பொருட்டு யோகீசுவரரிடம் விடைபெற்றுச் சென்றான். சந்தியாகாலமுஞ் சமீபித்துவிட்டது யோகீசுவரர் சிந்தையிலாழ்ந்தவர்போற் சிறிதுபொழுது அங்கேயே இளைப்பாறி யிருந்து பிறகு எழுந்திருந்து நேர்வடக்காய்ச் செல்லும் ஒரு சிறு கொடிவழியின் ஊடேசென்று நீலாசலத்தின் தாழ்வரையில் ஜனஸஞ்சாரமில்லாத ஓரிடத்தில் வந்துசேர்ந்து யாதொருபயமும் சம்சயமுமின்றி

அந்தப்பக்கம் முழுவதும் நல்ல பழக்கமுள்ளவர்போல நடந்துசென்றார். நாற்புரத்தும் அதிகோரமானவனம். ஜனங்கள் எவரும் நடுப்பகலில் கூட அத்திசை போகத் துணியார். நீலாசலத்தின் முகட்டில் யக்ஷ கின்னரர்கள் வாசமாயிருப்பதாக ஜனங்களின் நம்பிக்கை. ஜனங்களின் நடமாட்டமில்லாமையால் சாதாரணமாகவே பயங்கரமா யிருந்த அவ்வனப் பிரதேசம் கூடுவந்து சேரும் பலபக்ஷிகளும் உயரத்திற் செய்யுங் கிரேங்கார சத்தங்களாலும், இரவில்மாத்திரம் சஞ்சரிக்கும் மற்றும் சிலபக்ஷிகள் துஷ்டமிருகங்கள் முதலியவற்றின் உற்சாகத்தை வெளியிடும் அவசத்தங்களாலும், அப்பொழுது அதிக அச்சத்தை யுண்டாக்கியது. தைரியசாலிகளுக்குக்கூட அப்பொழுது அப்பிரதேசத்திற் சஞ்சரிப்பதென்றால் எங்குமில்லாத ஒருபயம் உண்டாகாநிற்கும். ஆனால் நமது யோகீசுவரர் சிறிதேனும் அச்சமின்றி அடர்ந்த அவ்வெங்கானகத்தின் நடுவே மலையின் முகட்டைநோக்கிச் செல்லத்தொடங்கினார். மத்தியில் தமக்கு வழிதப்பாமலிருக்கும் பொருட்டு அடையாளமாக வைத்திருந்த சிலமரங்களையும் பாறைகளையும் மாத்திரம் நோக்கிக்கொண்டு விரைவாய்ச் சென்றுகொண் டிருக்கையில் வழியில் பெரியதொரு பாறையின் பக்கத்தில் கம்பளியினால் உடல்முழுவதும் மூடியிருந்தவொரு மனிதனைக் கண்டார். வேறு சாதாரண மனிதனாயிருந்தால் அவ்வுருவத்தைக் கண்டவுடன் பயங்கொள்ளாமலிரான். யோகீசுவரரைக் கண்டதும் அந்த மனிதன் எழுந்துவந்து வணங்கி நின்று, "சுவாமி, தாங்கள் வர இத்தனை நேரமானபடியால், நாங்கள் கொஞ்சம் விசாரப்பட்டுக்கொண்டிருந்தோம்." என்றான். யோகீசுவரர், "சிறிதுகால தாமசமானதாகத்தான் தோன்றுகிறது. சரி, நீ சீக்கிரமாய் நடந்து முன்னே செல்" எனப்பதிலுரைக்க, இருவரும் வேகமாய் நடந்து போனார்கள். மரங்களின் அடர்த்தியாலும், இராத்திரி சமயமானமையாலும், கூடவந்துகொண்டிருந்த அம்மனிதன் சுழுந்து ஒன்றைக் கொளுத்திக்கொண்டு ஒருநாழிகைவழி செல்லலும் தூரத்தில் வேறொரு வெளிச்சம் காணப்பட்டது. அவ்வெளிச்சத்துக் கெதிராக இவ்விருவரும் நடந்துசென்று ஒரு பர்ணசாலையைச் சேர்ந்தார்கள். அதுதான் யோகீசுவரரது வாசஸ்தானம். அதற்கு மிக்க அருகாமையில் மரங்கள் ஒன்றுங் கிடையா. பரந்தவெளியா யிருந்தது. விசேஷ பரிமளமுள்ள பலவகைப் புஷ்பஜாதிகள் மாளிகையின் முன்பக்கத்தில் மலர்ந்திருந்தபடியால் இளந்தென்றல் மந்தமாய் வீசி பரமானந்தமளித்தது. யோகீசுவரருடன் கூடவந்தமனிதன் அவருடைய சேவகன். அவ்விருவரும் ஆசிரமத்தினுள்ளே பிரவேசிக்கையில் சிறிதுவயது சென்ற ஒருஸ்திரீ கைவிளக்கொன்றையெடுத்துக்கொண்டெதிரே வந்தாள். யோகீசுவரன் "விலாசவதிஎங்கே?" என்றுவினவலும், "தூங்குகிறாள்" என அவள் பதிலுரைத்தாள். "இவ்வளவு முன்னேரத்திலேயே தூங்கிவிட்டாளா?" என்று யோகீசுவரன் கேட்க, "பகலெல்லாம், அதிகக்கஷ்டப்பட்டு ஓடியாடித் திரிந்தபடியால் களைப்

படைந்து தூங்குகிறாள்" என்றாள். "சரி, தூங்கட்டும்" என்று சொல்லிவிட்டு யோகீசுவரர் உள்ளே சென்று தம் உடையைக் களைந்துவைத்தார். அதனுடன் ஜடையையுந் தாடியையுங் கூடக்களைந்து வைத்தீரை நோக்கின் அவை செயற்கையானவையென்றுநாம் கூறாமலே விளங்கும். யோகீசுவரர் வெளியே செல்லும்போழுது அப்போய் ஜடையையும் தாடியையும் தரித்துக்கொள்வது வழக்கம். அதற்குக்காரண மின்னதென்றறிய முடியவில்லை. ஒரு வேளை தன் மெய்யுருவத்தை மறைக்கும்பொருட்டு போலும். சித்த புருஷர்களின் அந்தரங்கத்தை யறிவது எளிதல்லவே. அது எவ்வாறாயினும் ஆகுக; வேஷம் முற்றுங் களைந்துவைத்த பொழுது அவரது முகத்தில் உவமையற்ற அழகும் சௌஜன்னியமும் பிரகாசித்தன. இயல்பாயுள்ள பாதி நரைத்த தாடியும் மீசையும் தென்பட்டன. அவர் வயதுசென்றவரென்பதைக் குறிக்கும் ஒன்றிரண்டு திரைகளும் காணப்பட்டன. சுருண்டு நீளங்குறைந்த அவர் தலைமுடி கழுத்தின் பின்பக்கமாய்ச் சேர்க்கப்பட்டிருந்தது. தாமணிந்திருந்த உடைகளை எல்லாம் எடுத்து அதனதன் இடத்தில் வைத்துவிட்டு, "ஆ! காலத்தின் மகிமை என்னே! எவ்வளவு வேகமாய்ச் செல்கின்றது காலம்! அற்புதம்!" என்று தமக்குள்ளேயே பேசிக்கொண்டு, அவ்வற்பகணத்திலேயே எவ்வளவோ சிந்தைகள் தம் மனதின்கண் நிகழ்ந்தனவென்பதை வெளிப்படுத்துவதுபோலும் ஒரு பெருமூச்செறிந்து மற்றொரு அறையின் கதவை மெல்லத் திறந்துகொண்டு சென்றான். சுவரினமேல் வைக்கப்பட்டிருந்த மிக்கமங்கிய விளக்கின் ஒளியானது அற்பமாய்ப் பிரகாசப்படுத்திய, அழகிய மருட்சியோடு அருகிருந்த கட்டிலிலமர்ந்து கண்வளர்ந்துக்கொண்டிருந்த ஓரிளங்குமரியை மிகுந்த அன்போடும் ஆனந்தத்தோடும் சிறிது பொழுது குனிந்து நோக்கி நின்றகாலையில் மனதில் நிறைந்திருந்த விசாரங்கள் ஜலரூபமாய் வெளிப்பட்டனவோ வெனத் தோன்றும்படி இரண்டு மூன்று நீர்த்துளிகள் யோகீசுவரரது நேத்திரங்களினின்று அவருக்குத் தெரியாமலே, துயின்று கொண்டிருந்த குமாரியின் மார்பின்மேல் வேகமாய் விழுந்தன. உடனே அக்குமாரி கண் மலர்ந்து "அப்பா அப்பா" என்று விளித்து யோகீசுவரனைக் கட்டித்தழுவினாள். இத்துயரத்துக்குக் காரணம் என்னவென்று விசாரிப்பவள்போல் மிக்க வருத்தத்துடன் யோகீசுவரரது முகத்தை நோக்கினாள். யோகீசுவரர் "ஒன்றும் அஞ்சவேண்டாம். விசேஷமொன்றுமில்லை. நான் சற்று முன் வெளியே போயிருந்தேன். திரும்பிவரக் கொஞ்சம் நாழிகையாய்விட்டது. வந்தவுடனே என் கண்மணி சஞ்சலமொன்றுமின்றிச் சுகமாயிருக்கிறாளா எனப்பார்க்க வந்தேன். சுகமாய்த் துயில்வதைக் கண்டபொழுது எனக்கு சந்தோஷமும், கண்மணிக்கு ஏதேனும் கெடுதி சம்பவிக்குமோவென்ற அச்சத்தினால் துக்கமும் உண்டாகவே என்னை யறியாமலே கண்ணீர் மல்கினதன்றிமற்றுத் துயரத்துக்குக் காரண

மேதுமில்லை. தூங்கிக்கொண்டிரு, சாப்பிடும்பொழுது கூப்பிடுகிறேன் என்ருன். குமாரி, "அப்பா, எனக்குப் பேசுவதற்கு யாரும் இல்லாதிருந்த படியாலும் தோட்டத்தில் வேலை செய்த களைப்பினுலும் இவ்வளவுமுன் னேரத்தில் படுத்துக்கொண்டேன். இப்பொழுது அய்யா திரும்பி வந்துவிட் டபடியால், இனி யெனக்குத் தூக்கம் வராது" என்றுகூற, யோகீசுவரனும் அக்குமாரியும் போஜன சாலைக்குப் போகையில், முன் சொன்ன வயது செ ன்ற அம்மணி வந்து சமையலாய் விட்டதெனத் தெரிவித்தாள். யோகீசுவரன் "அப்படியாயின், சாப்பிடுவோம்" என்று கையால் முகங்களைச் சுத்திசெய்து கொண்டு குமாரியுடன் கலத்தின்முன் உட்கார்ந்தான். விலாஸவதி என்னும் பெயர் படைத்த அக்குமாரி யோகீசுவரனுக்கு அன்னம் பரிமாறி மற்றும் வேண்டிய உபசாரங்களைச் செய்துவிட்டு, பக்கத்தில் தனக்கு வைத்திருந்த கலத்தின்முன் உட்கார்ந்தாள். யோகீசுவரன் ஏதும் பேசாமல் விரைவாய்ச் சாப்பிடத்தொடங்கினுன். விலாஸவதி "அப்பா, எனக்குச் சாதம் பிசைந்து கொடுக்காமல் சாப்பிடுகிருயே" என, யோகீசுவரன் "ஓ! நான் மறந்து போய் விட்டேன்" என்று கைகழுவிக்கொண்டு வேறு கொஞ்சம் சாதம் எடுத்துப்பிசைந்து உருண்டையாய் உருட்டி விலாசவதிக்குக் கொடுத்தான். "நான்வழி நடந்த அயர்வினுலும் பசியினுலும், வழக்கம்போலஉனக்குச்சாதம் உருட்டிக்கொடுக்க மறந்துவிட்டேன்" என்ருன். விலாஸவதி "களைப்பி ஞல் அப்பா மறந்திருப்பாரென நான்சந்தேகித்தேன்; ஆனபோதிலும் அப்பா எனக்கு ஒரு பிடிசாதமாயினும் உருட்டித் தராவிட்டால் எனக்கு என்னவோ போலிருக்கிறது. ஆகையினுல் தான் கேட்டேன்" எனப்பகர்ந்து சாப்பிட ஆரம்பித்தாள். சாப்பிட்டானதும் இருவரும் சாப்பாட்டறைக்கும் முற் றத்துக்கும் நடப்பது வழக்கம். அன்றிராத்திரி அதிக நேரம் நடக்கவில்லை. ஆகையால் அவர்கள் அதிகமாய் ஒன்றும் பேசவில்லை. சிறிது பொழுது நடந்த பின்பு யோகீசுவரன் "பார்வதீ" என்றழைத்தான். அப்பொழுது அவ்வயது சென்ற அம்மை எதிரேவந்து படுக்கைப்போட்டிருக்கிறது என்று கூற யோகீசுவரன் விலாசவதியைக் கட்டிலில் படுக்கவைத்து "நான் படுத் துக்கொள்ளப்போகிறேன் என்று கூறிவிட்டுப் போகுங்காலையில் "இன்று அப்பாவுக்கு ஏன் இவ்வளவு மறதி" என்று விலாஸவதி வினவ, "எனக்கு மறதி இன்று கொஞ்சம் அதிகம், அதற்குக் காரணம், வழி நடந்தசிரமந்தான்" என்று சொல்லி வழக்கம்போல் விலாஸவதியின் வதனத்தை அழுந்த முத்தமிட்டு "சுகமாய் தூங்கு" என்றுரை த்து விளக்கை அவித்துவிட்டு வெளியேபோனுன். ஆனுல் விலாசவதி யுடன் சொல்லியபடி உடனே தூங்கப்போகவில்லை. சிறிதுநேரம் போச னசாலையில் உலவியபின்னர் முற்றத்துக்குவந்து "ராமதாசா" என்று கூப் பிட்டான். அப்பொழுது யோகீசுவரனுடைய சேவகன்வந்தான். அவனுடன் நாலைந்துநாழிகைநேரம் இரகசியமாய்ச் சிலவிஷயங்கள் பேசிவிட்டு அவனை

யும் படுத்துக்கொள்ள அனுப்பிவிட்டு, தனக்குள்ளே வெகுநேரம்வரை ஆலோசனையில் ஆழ்ந்து சிறிதுநேரம்நடந்து கிட்டத்தட்ட அர்த்தராத்திரி சமயமானபொழுது படுக்கையிற்போய் அமர்ந்தான்.

---

## A GARLAND OF DIVINE PRAISE.
## ஞானனந்தனடிமாலை.

---

அனைத்துயிரும் சுகிப்பதற்கா யெனைத்துயிரும்
அகிலேசன் அமைத்த நன்றித்
தினைத்துணையும் மனநலிந்தோ ருயிர்சுகிக்க
வன்றென்ற சிறந்த நீதி
நினைத்துலகில் அன்பறிந்து புசாதார்
நிலையறியா நிந்தைசேரும்
வினைத்துயரி லாழ்ந்துவிழி மனத்துயிரை
விடுவதற்கே விரைகின்றாரே. (25)

இருளொன்றே தீமையின்றாய் எவ்வுயிரும்
நம்முயிருக் கினமென் றெண்ணு
மருளொன்றே வானானை மறைப்பதுவாம்
இவ்வகில வளங்கொள் காட்சி
பொருளொன்றே பலபடவின் றதுவாம் எப்
பொருளும் உடற் புகுமான்மாவும்
அருளொன்றே ஆளுவதாம் அஃதொன்றே
அனைத்தினுக்கும் ஆதியாமே. (26)

விரும்பிவிடும் பொருளெல்லாங் கிடைத்திலவே
என்கின்றவிசனத்தாலே
கரும்பான மனமெல்லாம் இரும்பாவா
சிலர்தமது கருத்தினுள்ளே
பெரும்பதவி எனநினைக்குந் துரும்பெல்லாம்
ஈந்திலதேற் பேதைநெஞ்சால்
வரும்பிசகென் றுணராது தெய்வமில்லை
யென்றவர்நா வழுக்குவாரே. (27)

ஊக்கமொடு ஜடமுறடி உலகமுண்டாம்
உத்தமம்ஏஞ் சுவதனாலே

ஆக்கலொடு தற்காத்தல் அழித்தல் இவைக்
கதிகாரி அமைய வேண்டாம்
நோக்கினென ஒருசாரார் நுவல்வர் அவர்
நோக்கொருசார் நோக்காம் தோற்றப்
போக்கினுக்கோர் போக்குரைப்பர் போதமெனு
முட்பொருளின் பொருள்காணுரே. (28)

போதத்தின் றனிஇயல்பும் உயர்பிறப்பும்
ஜடமாய்ந்தும் புலப்படாமல்
வாதத்தே மூழ்கிஅஃ திலதென்றும்
ஜடமென்றும் வகுத்த நாளு
பூதத்தின் பண்பென்றம் புலம்புவர்பண்
பவையெல்லாம் போதத்திற்கென்
ரூதத்தான் றடையெதுவோ ஜடம் போதம்
பிறக்குமிடம் ஒன்ருகாதோ. (29)

தீதிருக்கத்தீதிழைக்குந் துன்பிருக்கத்
தெய்வமில்லை செகத்துக்கென்று
வாதுரைப்பர் சிலர் தோலாற் பழம்பொதிந்த
வாறு நன்மை மறைத்துத் தீது
மீதிருக்கும் அது நன்மை யுருவிகற்ப
மாமென்ற விவரம் பாரார்
ஈதிருக்கவே நன்மை நன்மையெனக்
காண்பர்விழி யெட்டாதாரே. (30)

ஆழ்ந்தகன்ற நோக்கினர்க்கு நன்மையலா
தகிலத்தில் அணுவுமில்லை
மாழ்ந்தவுயிர் உடல்மாறிவாழ்ந்த வுயிர்
ஒன்றுக்கும் மரிப்பேயில்லை
தாழ்ந்ததெனல் உயர்ந்ததெனல் சங்கேத
மாம்பேச்சுத் தத்துவங்கள்
சூழ்ந்தவருக் குயிரிலெல்லாம் உலகிலெல்லாம்
ஒருசோதி துதக்கமாமே. (31)

பசியின்றி உணவில்லை பாடில்லை
சுகமில்லை பாடில்லாதே
விசியின்றி உதிப்பில்லை சலிப்பின்றி
நினைப்பில்லை நிகழ்ச்சியில்லை

நசிவின்றி வசிப்பில்லை வசிப்பின்றி
வாழ்விலுறு நன்மையில்லை
சுசிவின்றிக் கடவுள்பதங் கருதவில்லை
வருதலில்லை கருணைதானே. (32)

பிறந்திருந்த மனிதரெலாம் பறந்தொளித்தார்
நாமவர்க்குப் பிந்தினின்றோம்
இறந்திருந்த மனிதரெலாம் இருந்திருந்தால்
நாமிருக்க இடமின்றென்றே
மறந்திருந்து மரணத்தைப் பழித்திடுவோம்
நம்மதுபோல் மதியாகாமற்
சிறந்திருந்த தெய்வவருட் சித்தவிரி
வறியாதே தியங்குவோமே. (33)

மண்ணின்றிக் காற்றின்றி விண்ணின்ற
விளக்கின்றி வளப்பமோடு
தண்ணின்ற நீரின்றித் தரையில்மரம்
மாமனிதர் தங்கலில்லை
கண்ணின்றிக் காட்சியிலை புலனின்றி
மனமில்லை கருதலில்லை
பெண்ணின்றிப் பிறப்பில்லை பிறப்பின்றி
உயரில்லை பெருக்கமின்றே. (34)

நோயின்றி மருந்தெண்ணோம் சௌக்கியத்தின்
மதிப்பறியோம் நோக்கோந்தேகம்
தாயின்றிப் பிள்ளையிலாவதுபோல
உணவின்றிச் சரீரமில்லோம்
தீயின்றி உணலரிதே தெரியாமை
முன்னின்றித் தெளிவதில்லை
காயென்ற உழைப்பின்றிக் கவனியென்ற
தகுதியில்லோம் கருதினிங்கே. (35)

பேசத்தால் வழக்குளதாம் வழக்கிலையேல்
ஞாயமெனும் பேச்சுமில்லை
சீதத்தால் வெப்பறிவோம் சீதவெப்பின்
திரிதன்றித் தேகமில்லை
சேதத்தால் ஆதாயமுள்ளதுவாம்
இவையிரண்டும் செனனத்தாகும்
கேதத்தாற் சுகமுளதாம் தனிச்சுகத்தில்
இருப்பதொரு கேதமாமே. (36)

படர்கின்ற இரவுபடைப்பிலதேல் நட்
சத்திரங்கள் பகட்டும் திவ்பச்
சுடர்நின்ற தறிவோமோ தியங்குவதாற்
சுகமுளதோ சோர்வு போமோ
இடர்நின்ற தாலன்றி அறிமுறியோம்
உயர்நிலையை எண்ணும் துன்பம்
தொடர்கின்ற தாயின் அதைத் தொடர்கின்ற
நலமறிந்து துதிசொல்வோமே. (37)

தீயதெனும் விறகெரிய நன்மைப்ரகா
சிக்கின்ற தீபமாகும்
ஆயதெனுந் தெளிவுடையார்க் ககிலேசன்
தீயவையால் அல்லாதாகார்
தீயபொருள் உலகி லமுக்கிடை கின்ற
தோற்றமதாற் றீயதன்று
தாயவள்தன் சோணிதப்ஸப வாயிழிந்த
சேயதனைத் தள்ளுவாரோ. (38)

இவ்வளவு துன்புலகத் திருந்துநம
திருமாப்புக் கெதிரொன்றில்லை
அவ்வளவு துன்பிலையேல் அறியாமை
இருமாப்புக் களவுண்டாமோ
எவ்வளவு கொடுத்தாலும் எடுத்தாலும்
அன்புவழி எண்ணு மாந்தர்
செவ்வளவு செவ்வாரோ தெய்வவரு
ளிருந்தவனாத் திருப்பாக்காலே. (39)

தீங்கிருந்த தேனுமிகு மாறும்வை
யகத்றவழி சிந்திப்போர்க்குப்
பாங்கிருந்த தாமதியே மதிசிறக்க
வசையுமுண்டு பயிற்சியுண்டேல்
ஓங்கிவர மதிசெழிக்க வளம் உழைக்க
வலி நமக்கென் றுதவிக்கண்டும்
எங்கிடுவோ மெனில்அஃதிந் தவர்குறையோ
நங்குறையோ எண்ணுவீரே. (40)

தி. லக்ஷ்மணப்பிள்ளை.

# THE SYSTEM OF LOKAYATHA.

## நாஸ்திகமதம் அல்லது உலோகாயதமதம்.

உலகின்கணுள்ள பலவகைச் சமயங்களிலும் உலகாயத சமயம் ஒன்று. பெரும்பாலும் இக்கலிகாலத்திலே இம்மதமேபலரால் அநுட்டிக்கப்பட்டுவருகின்றது. என்னை? வேதாகமங்கள் விதித்த அரியதவவழிக்கு இதுநேர்விரோதமானதாய் எவரானும் சுலபமாய்ச் செய்யக்கூடியதாகி மனம்போனபோக்கெல்லாம் தனக்குச்சம்மதமாகலான் என்க.

இம்மதத்தை யாதியிலே தேவகுருவாகிய வியாழபகவான் இந்திரன் பொருட்டுச்செய்தனர். காரணமென்னெனில், சூரபன்மனாலே தன்பதமிழந்து வனத்திலே ஒளித்திருந்து பெருந்துன்பப்பட்ட இந்திரன் குமாரசுவாமியாலே அசுரர்குலமழிந்து விண்பதமேறிய காலத்து எண்ணுவான்,

அந்தோ! செயற்கரிய அசுவயாகங்கள் பலவற்றைமுயற்சியுடன்செய்து பொன்னுலகடைந்து தேவர்போற்ற முனிவர் ஆசிகூற, கந்தருவர், கின்னரர் பாட, மற்றைய கணத்தவர்கள் இட்டவேலை பொட்டெனவியற்ற, அமுதமுண்டு, நரைதிரை, மூப்பு, பிணி, துயில், பசிமுதலியனவின்றி ஐந்தருவினீழலிலே வயந்தச்சோலையிலே சுதன்மைமண்டபத்திலே அரிபாசனத்தில் வீற்றிருந்து, திலோத்தமை முதலிய நால்வர்கணிகையர் ஆடல்கண்டு, அரம்பையருள்வேண்டினோர் போகமுற்றி, மூவுலகத்துமில்லா நல்லழகுபடைத்த இந்திராணியுடன் இன்பநுகர்ந்து, சிந்தாமணி சங்கநிதி பதுமநிதிமுதலியனவேண்டியபொன் ஆபரணம் வஸ்திரமுதலிய அலங்காரப்பொருள்களைக் கொடுக்க காமதேனுவேண்டிய அறுசுவை அமுதந்தர, கற்பகம்விரையுயிர்ப்ப, சப்தமேகங்களும் நம்மாணையினடப்ப, உலகெலாம்போற்ற அரசுசெய்யலாமென்று எண்ணிவந்தேம்.

இப்பொன்னுலகமோ சூரபன்மன் குமாரனாய பானுகோபனால் எரிக்கப்பட்டுக்கரியுலகமாயிற்று. போக்கியபொருள்கள்யாவும் அசுரரால்கொள்ளைகொள்ளப்பட்டன. எமது குமாரனுந்தேவர்களுஞ் சிறையிருந்து படாதபாடெல்லாம்பட்டார். அரம்பையரும் கணத்தவர்களும் அசுரர்பாற்சென்று இருந்து குற்றேவல் புரிந்தார். இதுமட்டோ யாமும்தேவியும்காட்டிலொளித்துப் பெருந்துன்புழந்தேம். இன்னும் நம்மைப்போன்ற இந்திரராய் வந்தோர் யாவர்தாம் இன்புடன் அரசாண்டார். ஒருவருமின்றே. புலிமுகாசுரன் அந்தகாசுரன், இரண்டாசுரன், சலந்தராசுரன், கயாசுரன், தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன்மாலி, வலாசுரன், வாற்கலி, துவட்டா, விருத்திராசுரன் சம்பராசுரன்,*தாரகாசுரன் முதலிய அசுரர்களானும் இராக்கதர்களானும் முனி

* இந்த தாரகாசுரன் சூரபன்மனிளவலன்று. திரிபுரத்தசுரர்களின்றந்தை. இவனுங்குமாரசுவாமியாற்கொல்லப்பட்டான்.

வர்களாலும் நாடோறுந் துன்புற்றூரன்றி, ஒருநாளாயினும் இன்பமாக விருந்து அரசாண்டதுகண்டதுமில்லை கேட்டதுமில்லை.

வென்றி யரக்கரான் மேதகைய தானவரா
லன்றி முனிவரா லண்டரா லேனையரா
லொன்றுசெய வொன்று யுறுதுயரந் தாழ்ந்ததன்றி
யென்று மகிழ்வா யிடரற் றிருந்தனமே.

என்றுஎண்ணி, இந்திராணிபோடுகூடிவாழும் வாழ்க்கையைவெறுத்துத்தான் போக்கியப் பொருள்களையும் உவர்த்தான். அரசியலும் துரும்பென எண்ணுதயர்த்தான். இனிச் சிவபெருமானது திருவடிக்கண் இரண்டறக்கலக்கும் அத்துவிதவின்பமே நித்தியவின்பமென்று உணர்ந்தான். அவ்வின்பத்தைத் தவஞ்செய்து பெறுவேனென்று துறவொழுக்கத்தைப்பூண உத்தேசித்திருந்தான்.

அதனாலே "அரசனில்லாவிடற் குடிகளென்படும்" என்றுற்போலச்சுவர்க்கலோகம்பாழாயிற்று. தேவர் முனிவர் முதலாயினோர் சீர்குலைந்தனர். உலகிற்கு முற்காரணமாகிய மழையுமிழந்து பொய்த்துப் பூவுலகுயிர்களும் சாந்துயரின் நின்றன. பசுக்கள் விருத்தியில்லா தொழிந்தன. தானர்தவம் சிறப்பு பூசனை சூனியப்பட்டன. உலகெலாந் தலைதடுமாற்றமடைந்து பரிபவப்பட்டதுகண்டதேவகுருவாகிய பிருகஸ்பதிபகவான் ஆலோசித்து,

பொய்ம்மையும் வாய்மையிடத்தபுரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

என்னுந்திருக்குறட் கருத்தைக்கொண்டு ஒன்றுசெய்வாராயினர். இந்திரனை முன்போல நிறுத்தற்கு உபாயம் உலகாயதமதக்கொள்கையே யென்று உத்தேசித்து, இந்திரன் இருக்குமிடஞ்சார்ந்தார். சதக்கிரது உடனெழுந்து, "குரவே தீர்க்கநமஸ்காரம். துரக்கவாழ்க்கையைத்துறந்தேன். சிறக்குவாழுஞ் சிவனடிதேடினேன் ஐயனே அன்னதர்குபாயமருளுதி" என்று அவனடி வீழ்ந்தான்.

பிருகற்பதியார் இந்திரனை யெடுத்துத்தேற்றி ஐய! கேண்மதியென்று உலகாயத மார்க்கத்தை உபதேசித்தார்.

புன்றொழிலாகிய பொய்யும் வாய்மையா
மொன்றொரு பெரும்பயனுதவு மாயிடி
னென்றனர் சுரர்குரு விந்திரன்பத
நின்றிட வீதொரு நிகழ்ச்சி கூறுவான். இந்திரனே!

இச்சுவர்க்க வின்பத்தையும் மேன்மையான அரசையும் வெறுத்தனை; இவற்றைவெறுத்துப் பின் எதுபெறுதற்காகத் தவஞ்செய்ய நினைத்தாய். துன்பப்பட்டவர்தான் பின்னர் இன்பத்தையும் அடைவர் அது உன்னளவன்று,

இந்தமூவுலகத்திற்கும் உரிய இயற்கையாகும். தேவர்களுள்ளும் முனிவர்களுள்ளும் யாவர்தாம் மங்கையர் இன்பத்தை வெறுத்து விட்டவர்? ஒருவருமில்லை. எவரினும் மேற்பட்ட பிரமன், விட்டுணு, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளன்றோ தம்மனைவியர் வேறாக இருத்தற்குச் சகிக்காது நாவிற்குடியிருத்தியும், மார்பில் அரசுசெய்யவைத்தும், பாதியுடம்பாக்கியும்மருவிவாழ்கின்றார். மங்கையரைப்பெறும் இன்பமே யின்பம். மற்றனவெல்லாந்துன்பம். செல்வம் யாதெனில் அழகுடைய மடந்தையரை யதிகமாகப் பெறுதல். வறுமையென்பது எதுவெனவிசாரணை செய்யுங்கால் அன்னவரை யில்லாமையே. அதுவே 'கொடிதினுங் கொடிதாயவறுமை யாகும்.

மங்கையரிடம் ஆலிங்கனம், சும்பனம், தாடனம், மைதுனம், நகவர்ணனையென்னும் பஞ்சலீலைகளையும் பஞ்சமுத்திரையாகக்கொண்டு அவர்கள் கண்ணோக்கவருள் பெறுகையே சட்சுதீக்ஷை; அவரடியா லுதைபடலே திருவடி தீக்ஷை; அவர்மெய்தொட்டுப் பயிறலேபரிசதீக்ஷை; அவரது இனியமழலைச் சொற்களைக்கேட்டலே வாசகதீக்ஷை; அவரிட்ட ஏவல் செய்தலே தவம் மற்றையனவெல்லாம் அவம். அவர்களை முத்தமிடுவதே சுகமுத்தி. அவர்கள் உறுப்புக்களே பரஞானம் அபரஞானம். இருவரும் கூடுவதே மகாயோகம். இவர்கள் லீலைச்செய்கையே சற்கருமம். அவையிலாமல் வேறொன்று கொள்வதே துர்க்கருமம். அவரால் வருமின்பமே பேரின்பம்.

இங்ஙனம் பிரத்தியக்ஷமாயிருக்கிற இவ்வின்பங்களைவெறுத்து வேறோர் இன்பமிருக்கின்றதென்று துறந்து பூசிப்பவர் யாவரும், காணப்பட்ட தண்ணீரையுண்டுசளை தீர்ந்து சுகமுறாது, கானற்சலத்தை நீரென்று அலைந்து அலைந்து தாகம்வருத்தச் சாவதுபோலும்; மும்மூர்த்திகளும் பெரியவராய் விளங்கியது எதனால்? பெண்களாகிய தஞ்சத்திகளை நீங்காது இருத்தலானன்றோ! மங்கைமார்போகம் கூடாதென்று வெறுப்போர் நோயாளிகளும், வலிமையற்றவர்களும், புருடத்துவமில்லாதவரும் பேடும் அலிகளுமேயாம். அவரின்பத்தான்வருஞ் சிறப்பையறியாதவரோ அவ்வின்பத்தைச் சிற்றின்பமென்று இகழ்வர். காமதந்திரங் கூறியவாறு கலப்பாராயின் அதுவே பேரின்பமென்றற்கு இழுக்கென்னை? மகளிரோடு கலந்துஉண்டுடுத்து வாழ்வதே சுவர்க்கவின்பம். அது பிரிந்து பகைவராலும் நோயாலும் வறுமையாலும் நூற்கொள்கைகளாலும் பிறவற்றாலும் வருந்துவதே நரகத்துன்பமெனப்படும். சுவர்க்க நரகங்கள் இவையேயன்றி வேறில்லை.

கண்ணாற் காணப்படுவன எவையோ அவைகளே யுண்மையெனப்படும். அவற்றைவிட்டு அநுமானமென்றும், ஆகமம் என்றும், ஐதிகமென்றும், சம்பவமென்றும், பரிசேட சுபாவங்களென்றும் பற்பல அளவைகள் காட்டிக் காணாதபொருள்களை யெல்லாம் உண்மை உண்மையென்று கத்திக்கத்தி மண்ணாய்மடிந்தார் பலர், கடவுள் இருக்கிறார் என்று கதறுவர். அப்படியொன்

றுளரேல் கண்ணிற்குக் காணப்படுமன்றோ ? அங்ஙனமில்லாமையால் கடவுள் உண்டென்பதுபொய். அது ஆகாயத்தில் மரம் பூத்துக் காய்த்துப் பழம்பழுத்த என்பதுபோலவும், மலடிமகன் முயற்கொம்பேறி ஆகாயப் பூவைப் பறித்தான் என்பதொக்கவும் இருந்ததென்றறிக.

மண் நீர், நெருப்பு, காற்று என்னும் நான்கு பூதங்களும் பிரத்தியக்ஷமாக் காணப்படாமல் அந்நான்குபூதங்களுமே தெய்வமாம். இவையொன்றோடொன்று சேர்ந்தகாலத்தே உடம்புதோன்றும். இவற்றுள் ஒன்று பிரிந்துவிடின் அவ்வுடம்பும் சிறந்து பிரியும். வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு என்னும் முப்பொருள்களுங் கூடியவிடத்தே சிவந்த நிறமொன்று தோன்றுவதுபோல நாற்பூதங்களுங்கூடிய விடத்தே யோருணர்வுண்டாம். அது உடம்பு வளர வளரத் தானும் வளராநிற்கும். உடம்பு தேயத்தேய தானுந் தேய்ந்தொழியும். உடம்பிற்கு வேறே யுயிரென்பதும் பொய். சரீரத்திற்கு இன்பதுன்பங்கள் , இயல்பாகவுள்ளன. இன்பதுன்பங்களுக்கு வினையோ என்பது கையின்கணுள்ள விரல்களும் ஏற்றமாகவும், குறைவாகவும், துர்க்கந்த நற்கந்தங்களும், சுவைப்பொருள்களும் ஒன்றுக்கொன்று ஏற்றமாகவும் குறைவாகவும் இருந்ததால் அவை யங்ஙன மிருத்தற்கு என்ன கன்மஞ் செய்தன ? ஆதலால் இவ்வேற்றக்குறைவுகள் இன்பதுன்டங்களெல்லாம் நாற்பூதங்களின் ஏற்றக்குறைவுகளன்றி வேறல்ல. குயிலைக் கூவுவித்தாரையும்மயிலைச் சித்திரித்தாரையுங் கண்டிலேம். ஆதலால் கடவுளொருவனூட்டியுறக்கி யாட்டுகின்றான் என்பது பிதற்றே. எல்லாம் இயற்கையாவே யமைந்துள்ளன. இந்தத்தேசம் விட்டுப் பின்னொருதேசம் எடுப்பேமென்று கூறுவது அவிந்துபோன விளக்கு ஓரிடத்திற்போயிருந்து மீளவும் வேறோர் திரியிலேபற்றி யெரியுமென்பதை யொக்குமாதலால் மறுபிறப்புண்டென்பதும் பொய்; இவ்வுண்மையுணரா அறிவீனர் மறுபிறப்புண்டென்று தவங்கள் பட்டினி முதலியவற்றான் வருந்துவர்.

கற்பமுதலிய மருத்துவநூல்கள் வலிமையில்லா நொய்ய அறிவினராற் கட்டப்பட்டன. இரணியதானம், அன்னதானம், பூதானம் முதலியவற்றையுயர்வாகக்கூறும் நூல்கள்பசியினால் வருந்திய வறியவராற் செய்யப்பட்டன.

தி. அ. ஸ்வாமிநாதையர்.

---

# KULOTUNGA CHOLAN KOVAI.

# குலோத்துங்கச்சோழன் கோவை.

(353-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

## தலைவன் றனக்குத் தலைவி நிலை கூறல்.

61. கண்ணுஞ் சகோரத்தை நீலில வாய்வைத்துக் காய் கதிராய்
யுண்ணாண் முளரி யுனைநோக்கி யேவைத்து மொண்புயத்துத்
தண்ணார மாலைப் பெருமான் குலோத்துங்கன் றஞ்சைவெற்பிற்
பெண்ணா ரணங்குநின் றுவண்ண லேயப் பெரும் பொழிற்கே.

## தலைவன் சேறல்.

62. தள்ளாப் பதமிரண் டாய்ப்பிறந் தோமன்றித் தாவிவிழப்
புள்ளாய்ப் பிறந்தில யேநெஞ்ச மேபுனல் வேணியனை
யுள்ளாரக் கொள்ளுங் குலோத்துங்கச் சோழ னுறந்தை வெற்பிற்
கள்ளாரக் காவினிற் பார்தமைக் கூடக் கடுகுதற்கே.

## தலைவியைக் காண்டல்.

63. நன்னித் திலங்க ளிருபாலுஞ் சிந்தநந் தோடொழுகும்
பொன்னித் துறைவன் குலோத்துங்கச் சோழன் புகார்வரைவா
யுன்னிக் கனியு முளத்தா மரையினுள் ளோரு மொரு
கன்னிக் களியன்ன மென்னுவி நோக்கியிக் காவின்றதே.

## கலவியின் மகிழ்தல்.

64. தேனார் சடலுந் திருப்பாற் கடலுந் திரை புரண்டொன்
றுனாலைத் தன்மைத்தத் தன்மையன் றேவகி லாண்ட மெல்லாங்
கோனாகுஞ் சங்கரன் * முன்னோன் குலோத்துங்கன் கோழி வெற்பின்
மானாரும் யானு மணந்தவிப் பேரின்ப மாகடலே.

## புகழ்தல்.

65. மட்டார் குழலிகலவியி னீக்கிய மாதிரும்பக்
கட்டா தொருகணந் தாழ்த்தன ளேற்கவி வாணர்செம்பொற்
கொட்டார மன்னன் குமார குலோத்துங்கன் கோழிவெற்பி
லெட்டானையு நிலை கெட்டோடு மூதண்ட மென்படுமே.

---

* முன்னுங் குலோத்துங்கன் என்பதும் பாடம்.

### பாங்கியோடு வருகெனப் பகர்தல்.

66. கோங்கார் முகிழ்முலை யாய் மெய்யு நீழலுங் கூர்பொருளும்
பாங் கா முரையும் பிரிவதுண் டோபண் டிராவணனை
யாங் காரந் தீர்த்த குலோத்துங்கச் சோழ னளகைவெற்பி
னீங்கா நின் காதலி தன்னுடன் வாவினி நீவரினே.

### பாங்கியிற் கூட்டல்.

67. அணியே பசும்பொனே ராயிரங் கோடிகொண் டாக்கிநடு
மணியே யமைத்தில ரேற்சிறப் போவணங் கார் சிரத்தைத்
துணியே தரப்பொருங் கோழிக் குலோத்துங்கன் சொற்சிலம்பிற்
பணியே யுனக்குச் செய் யாயம் பொருந்துக பான்மொழியே.

## பாங்கி மதி யுடன்பாடு.

### முன்னுற வுணர்தல்.

### பாங்கி நாற்றங்கண் டையுறல்.

68. கைபாற் பெருமண மெய்துமுன் னேயிந்தக் காரிகைதன்
மெய்யாற் பெருமண மெங்கெய்தி னுள்விரி காவிரிபோய்ச்
செய்யார்க்குங் கோழிக் குலோத்துங்கச் சோழன் சிலைக்கொல்லிவா
யுய்யாக் குறியிதென் னேவந்த வாறென் னுணர்கிலெனே.

### தோற்றங் கண்டையுறல்.

69. பொன்னுற்ற கொங்கையுஞ் சோர்வுற்ற கூந்தலும் பூந்தளிரா
மின்னுற்ற மேனியு மெங்கணுற் றுள்வெகுண் டோருக் கெல்லாங்
கொன்னுற்ற வேற்கைக் குமார குலோத்துங்கன் கோழியன்னாட்
கென்னுற்ற தோவறி யேன்சிறி யேனெஞ் சிளைக்கின்றதே.

### ஒழுக்கங் கண்டையுறல்,

70. ஒன்னாரை வெங்கண்ட வேலான் றனதடியோ ரிரண்டாக்
கன்னரி யாக்குங் குலோத்துங்கச் சோழன் கல்யாணிவெற்பிற்
பொன்னாண் கழுத்தில்வந் தேறுமுன் னேயிந்தப் பூவைதனக்
*கிங்கா னுறுப்பெங்கு மேறிய வாறினி யென்சொல்வதே.

### உண்டி கண் டையுறல்.

71. நிறையுண்ட செவ்வந்தி வான்சூழ் பிறையன்ன வின்குருதிக்
கறையுண்ட வாட்கைக் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பி
லறையுண்ட பாற்கடன் மேனாட் கடையமு தேனுநஞ்சாய்க்
குறையுண்டி யாகக் குறையுண்ட தேதென் குலக் கொடியே.

---

* கின்னு...வென்பதும் பாடம்.

## செய்வினை மறைப்புக்கண் டையுறல்.

72. சேணாடர் காவைந்து மொன்றாங் கரதலச் சென்னிப் பொன்னிச்
சோணாடு காக்குங் குலோத்துங்கச் சோழன்றன் னாருக்கன்றோ
நாணாளுஞ் செய்யும் வினைமறைத் தோடுங்கை நங்கொடிக்குங்
காணா தெனைமறைக் கும்வினை போந்த தெக்காரணமே.

## சேலவு கண் டையுறல்.

73. பந்தாட லுந்தண் சுனையாட லும்பைம்பொ னூசன்மிசை
வந்தா லுமறந் தேபுறம் போய்வண்டு கோடி இண்டச்
கொந்தாடு தாதகித் தாமன் குலோத்துங்கன் கோழி வெற்பின்
கந்தாடுங் காநடந் திம்மா துலாவருந் தன்மையென்னே.

## பயில்வு கண் டையுறல்.

74. பன்னாட் டரசர் மனைத்திரு வாழும் பலவுமொன்றாய்த்
தென்னாட்டுங் கோழிக் குலோத்துங்கச்சோழன் றிருமனைக்கே
தொன்னாட் பயின்றதற் கேளிற்ப தாமெனத் தோகைக் கென்னே
விந்நாட் பயிலு மிடமே யிடமீ தெனளிற்பதே.

## பிறைதொழு கென்றல்.

75. போதே யுதித்து மிமவான் புகுந்தும் புலக்கலையை
மீதே வளர்த்தும் விளங்குத லான்வியன் பாவனைத்துங்
கோதே பிறித்தறி கோமான் குலோத்துங்கன் கோழிவெற்பின்
மாதேமுத் தேவியர் காண்டொழ வேதகும் வான் பிறையே.

## ஐயங் கரந்து தையலை வினாதல்.

76. நுடந்தனை யோசுனை கொய்தனை யோதழை குன்றெதிர்கூ-
யடைந்தனை யோவண்ட லாடினை யோவம்புயா சனத்து
மடந்தைமன் கோழிக் குலோத்துங்கச் சோழன்மலைக் கொல்லிவாய்
விடந்தயங் கும்விழி யாயென்கொன் மேனி மெலிந்தனையே.

## கரந்துரை.

77. சுரிவண் டிமிர்கட நாகக் குலோத்துங்கச் சோழன்வெற்பிற்
பரிவண்டு தோழி யினையொழிந் தேனென்னற் பாணியினுஞ்
சுரிவண் டொலிப்ப வொலிசுனை யாடலுந் தார்க்குழல் சூழ்
வரிவண் டலைத்தமெய் வாட்டமல் லாதில்லை வாட்டங்களே.

### கரவு நாட்டம்.

78. கோத்தாரு மல்லிகை கிஞ்சுகம் பூப்பக் கொடியவந்தி
யத்தா மரைமல ரச்செய்த தாலளி வாயலம்பும்
புத்தார மாலைக் குலோத்துங்கச் சோழன் புகார்வரைவாய்
சித்தா வதும்வரு மோதிரு வேகின் செழுஞ்சுனைக்கே.

### சுனைவியந்துரைத்தல்.

79. கருமேக வண்ணன் குலோத்துங்கச் சோழன் கல்யாணிவெற்பிற்
றிருமேனி நாணுந் திருவுரு வாய்செய்ய வாய்வெளுப்ப
வுருமேற் பசப்பும் விழிமேற் சிவப்பு முடல் வெயர்ப்புந்
தருமேற் குடைவ னடியேனு மந்தத் தடஞ்சுனையே.

### நாண நாட்டம்.

80. சூரம்பு ராசிபண் டெய்தோன் குலோத்துங்கன் கோழிவெற்பிற்
பேசரம்பு நேரப் பொருங்கணல் லாய்புனை சாந்தகிலுஞ்
சீரம்பு பாதப் பதப்பஞ்சுந் தொய்யிலுஞ் சிந்துரமு
மீரம் படாது சுனையா டியவண்ண மெவ்வண்ணமே.

### தகை யணங் குறுத்தல்.

81. மன்னுக வந்த குலோத்துங்கன் கோழி வரையனையா
யுன்னுக மென்ன வொருத்தியென் காதலி யுண்டுனது
பொன்னுகும் வண்ணமு முத்தாகும் வாயும் புதுப் பகழி
மின்னுகுங் கண்ணுமொவ் வாமற்றெல் லாமொக்கு மெல்லியற்கே.

### நடுங்க நாட்டம்.

82. கோங்கோட்டும் வேங்கைக் கொடியோன் குலோத்துங்கன் கோழி
லங்கோட்டு மென்களத் தாயஞ்சி னேனரன் மூத்தமைந்தன் [வெற்பி
வெங்கோட்டி யானை முகனைமுன் பாய்வெய்ய கோட்டுருவாஞ்
செங்கோட்டி யானைகண் டேனஞ்சி னேனச் சிலம்பிலின்றே.

### (b) துறையுற வுணர்தல்.

### பேட்ட வாயில்பெற் றிரவு வலியுறுத்தல்.

83. கோடேட் பிடித்துமென் போதுகொய் வார்வரைக் கோடுறுந்தே
னீடேணி யைக்கொண்டு நேயர்கொள் வார்சில வேந்தர்க் கெல்லாங்
காடே கொடுக்குங் குலோத்துங்கச் சோழன் கல்யாணி வெற்பி
லேடே கமழுங் குழலியைப் பாங்கிகொண் டெய்துவமே.

## ஊர் வினாதல்.

84. யானா தரிக்கின்ற வெள்வடி வேல்கொண் டெறிகடலே
மேனாளை யூர்நுமக் கென்றறிந் தேனெழு மேதினிக்குங்
கோனாகுஞ் சங்கம ராச குலோத்துங்கன் கோழிவெற்பி
லூனாகும் வேற்கணல் லீரிந்த நாளெந்த * வூர்சொல்லுமே.

## பெயர் வினாதல்.

85. திருவோ விரதிகொல் லோசசி யோதெய்வ மோகினிதன்
னுருவோவந் நாளுங்கள் பேரறி வேனார வோருக்கைந்து
தருவோ வெனுங்கைக் குமார குலோத்துங்கன் றஞ்சைவெற்பின்
மருவோதி மீருமக் கிந்நாளெப் பேர் †சொல்லும் வாய்மலர்ந்தே.

## கேடுதி வினாதல்.

86. மூலையொன்று மானுடன் கன்றுமுன் னோட முழங்கருவி
நிலையொன்று சோரியென் போடவம் போடு நிழற்கொடிசூழ்
கொலையொன்று வேற்கைக் குமார குலோத்துங்கன் கோழி யன்னீர்
கலையொன்றிங் கோடிவந் தேநொந்த தோவுங்கள் காவலிலே.

## நெஞ்சு வினாதல்.

87. நஞ்சோ டெதிரு மொருவாளி தைத்துணை வாங்கலையின்
மஞ்சோ டுவமிக்கும் வார்குழ லீரந்த வானவர்க்கா
வஞ்சோட நல்குங் குலோத்துங்கச் சோழ னளகைவெற்பி
னெஞ்சோடி வந்ததுண் டோ†சொல்லும் வாய்மலர் நீர்திறந்தே.

## வழி வினாதல்.

88. ஏகா வழிபுகுந் தேதாகும போம் வழி யென்றுநின்றூற்
பாகார் மொழியிற் சொன்னாற்பழு தோபத்தி யாலுருகி
நாகா பரணனைப் போற்றுங் குலோத்துங்க னாகையன்னீ
ராகாது பெண்மைக் கிளநெஞ்ச லான்வனெஞ் சாய்கிற்பதே.

## மொழியாமை வினாதல்.

89. சொல்லே சிறிதொன்று சொன்னாற் குறைந்துமெய் சோர்ந்துவிழீர்
கல்லே கவணுக் கரிதென்ப தோகளைத் தோடினரைக்
கொல்லே மெனுஞ்சொற் குமார குலோத்துங்கன் கோழிவெற்பில்
வல்லே பொருங் கொங்கை யீர்திற வீருங்கள் வாய்மலரே.

---

* 'சொன்மினே' என்றும் பாடம். † 'சொன்மின்' என்றும் பாடம்.

### இடைவினாதல்.

90. புல்லுஞ் சுரும்புஞ் சிறைத்தாற்றுங் காற்றும் புனத்தெய்தினுற்
கொல்லு மருங்கை யென் றஞ்சுகின் றேன் குரைவாரிதியை
வெல்லுஞ் சிலைக்கைக் குமார குலோத்துங்கன் வெற்பணையீர்
கல்லுங் கவணுநுங் கைக்கீந்த வர்க்கென்ன கன்னெஞ்சமே.

### இதுவுமது.

91. தரும் போது கற்பக நேராங் குலோத்துங்கன் றஞ்சைவெற்பிற்
சுரும் போதி யீரொன்று கேட்கவின் றேன்சுனை சூழ்புனத்தைக்
கரும் போத சங்காலை மேய்வதென் ரூகடி தோட்டுதற்கு
வரும் போது கொண்டு வரமறந் தீர்கொன் மருங்கினையே.

### முகம்புகு கிளவி.

92. வேணிப் புயலண்ணன் மெய்யழ காச்செய்த மின்னினையோ
பேணிப் புனத்தி லெயினர்வைப் பார்பெரும் பாவலருக்
காணிக் கனகன் குலோத்துங்கச் சோழ னளகைவெற்பின்
மாணிக்க முண்ணு மதுவுக்கு மாறு மதியொத்ததே.

### யாரே யிவர் மனத் தெண்ணம் யாதெனத் தேர்தல்.

93. நெறியாயு மென்பர் நடுவில்லை யோவென்பர் நீண்டகலைக்
குறியாயு மென்பர் கிறிகூறு மென்பர் செங் கோகனகை
பிறியா வுறந்தைக் குலோத்துங்கச் சோழன் பெருங்கிரிவாய்ச்
செறியா வழகினர் யாரோ வவர்க்கென்கொல் சிந்தனையே.

### பாங்கி யெண்ணந் தெளிதல்.

94. வானோர் விழுங்கு மதிக்கலை யோமலை வாணர்மின்னு
ரானே ரிடைக்கலை யோவிலை யாக வவனியெல்லாந்
தானோர் தலைமைப் பெருமான் குலோத்துங்கன் றஞ்சைவெற்பின்
யானேருங் காவிவர் வேட்டமெல் லாமிங் கிவன்பொருட்டே.

### (c) இருவரு முள்வழியவன் வரவுணர்தல்.

### கையுறையேந்திவருதல்.

95. ஒருகோட்டரத்தி னிருகிளி யாமென்ன வோரிதண்மேன்
முருகோடு வண்ணமின் ருரிரு வோரு முழங்குபொய்கைக்
குருகோடி யார்க்குங் குமார குலோத்துங்கன் கோழிவெற்பி
லருகோடி நங்குறை யாற்றுதற் கேசெவ்வி யாமிதுவே.

## புனங்கண்டு மகிழ்தல்.

96. தாயுந் தமரு மெனத்தமிழ் தாங்கியுந் தண்டமிழை
யாயுங் கழகன் குலோத்துங்கச் சோழ னளகைவெற்பி
லேயுந் திருவனை யார்புனத் தேயிதண் மீதுவைக
மேயுங் கிளிக்கும் பிணைக்குங்கைம் மாறெம்மில் வேறில்லையே.

## இருவரு முள்வழிச் சேறல்.

97. குடையாற் புவிகவித் தாளுங் குலோத்துங்கன் கோழிவெற்பிற்
புடையார்க்குந் தோகையி லன்னமன் னீர் முன்பு போகப்பின்பு
நடையாற் பிடியு மொழியாற்பைங் கிள்ளையு நன்னயனக்
கடையாற் பிணையும் வரவழைத் தோபுனங் காப்பதுவே.

## அவ்வகை வினுதல்.

98. சுருதி கறங்கு முறந்தைக் குலோத்துங்கச் சோழனொன்னார்
கருதிய செல்வமு மாவியும் போங்கடுந் தீநிமித்தம்
பருதியுண் மூடி முகிற்சோரி யெய்தன்ன பாவைநல்லீர்
குருதிபின் சோரவிங் கேவந்த தோவொரு குஞ்சரமே.

## எதிர்மொழி கொடுத்தல்.

99. தரிக்கும் புவனம் புரக்குங் குலோத்துங்கன் றஞ்சைவெற்பி
லிரிக்கும் பிணைகலை யாங்கண்டி லேமெய் யிலாதுபொய்யே
யிரிக்கும் பிணைக்கும் பிணையன்று மற்றெவ ரேனு மெய்யுங்
கரிக்குங் கரியன்று காணெங் கடனென்றுங் * காவலனே.

## இறைவனை நகுதல்.

100. அலையேபண் டெய்த குலோத்துங்கச் சோழ னளகைக்கொல்லி
மலையே வருமன்னர் வேட்டைக்கெல் லாமறு மாற்றஞ் சொல்லேங்
கலையே கலையெனிற் கற்றோரைக் கேளுங் கரியெனிற்கொல்
லுலையே செலும்பின் கயங்களி றேற்புகு மோடையிலே.

## இதுவுமது.

101. வம்போடு தாதகித் தாரான் குலோத்துங்கன் வாழுறந்தைக்
கம்போடு நேர்திருக் கந்தரத் தீரிந்தக் காவலர்மாங்
கொம்போடு நின்றெய் தினராமொ ரானையைக் கோத்தெய்தவில்
லம்போ டடிச்சுவ டும்போன தோவந்த வானைகொண்டே.

---

*காவலன்றே என்றும் பாடம்.

பாங்கி மதியி னவரவர் மனக்கருத் துணர்தல்.

102. நோந்தார மாலைக் குமார குலோத்துங்கன் கோழிவெற்பி
னந்தா திருவர் கருத்துங்கண் டோநம்மை யேகரந்து
சந்தார் புனத்திருந் தார்முலை மேலிருந் தாமரையும்
வந்தார் புயத்தினு நீலமுஞ் சால மலர்ந்தனவே.

இதுவுமது.

103. வள்ளலுந் தாருவு நேரான் குலோத்துங்கன் வாழ்கொல்லிசூ
ழள்ளலம் பூஞ்சுனைச் சாரலுக் கேயடுத் தோரிருவ
ருள்ளமெல் லாமித் தனைநாட்சொல் லாதிங் கொளித்திருந்த
கள்ளமெல் லாமின் றறிந்தோ மிவர்தங் கடைக்கண்ணினே.

தலைவ னுட்கோள் சாற்றல்.

104. திங்கட்கண் ணுடியுந் தாரகை யாரமுந் தெய்வக்கங்கை
யங்கட் சினையு மெனத்தரு வேனங்கைம் மேருவென்ன
வெங்கட் களிற்ற னுறந்தைக் குலோத்துங்கன் வெற்பனையீ
ரெங்கட்கு வேண்டுவ துங்கடைப் பார்வைகொண் டேவுவதே.

பாங்கி குலமுறை கிளத்தல்.

105. மீன்சூழ் மதிகளி மீனெய்து மோவிடுந் தேரிரவி
மான்சூ ழுலகையந் தோபுகு மோமழுவாளியைப்போய்த்
தான்சூழ் தருந்திருத் தாளான் குலோத்துங்கன் றஞ்சைவெற்பிற்
கான்சூழ் குறமின்னை யோமன்ன நீமணங் காமிப்பதே.

தலைவன் றலைவிதன்னை யுயர்த்தல்.

106. மீனீந்த மீன்கந்தி யைக்குரு வேந்தனும் வேற் குகனு
மானீந்த வள்ளியைச் சேர்ந்தில ரோமழை யேழுமொன்றுத்
தானீந் தெனத்தமிழ்க் கீவோன் குலோத்துங்கன் றஞ்சைவெற்பிற்
கானீந்த பூங்குழ லாய்நல மேகுலங் கன்னியர்க்கே,

இதுவுமது.

107. எச்சுற்ற மான்புலி கண்டா லெனத்தெவ்வ ரேற்றெதிர
வச்சுற்ற வேற்கைக் குலோத்துங்கச் சோழ னளகைவெற்பி
னச்சுத் தருமிசைத் தேன்பிறந் தாலு நவையிலையாற்
கச்சுத் தடமுலை யாய்நல மேகுலங் கன்னியர்க்கே.

## நன்னுதற் பாங்கி யறிவாள் போன்று வினுதல்.

108. பந்தா நெருங் கழங்கா நெரும் பனிச்சுனைவாய்
வந்தாடெரும் பலகோடி யான்மத மாரிசிந்திக்
கந்தாடும் யானைக் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பிற்
சந்தாடுந் தோண்மன்ன யார்கண்ண வோவின் றனகண்களே.

## இறையோ னிறைவி தன்மை யியம்பல்.

109. ஓதியு நூன்மருங் கும்மங்கு லாமொண் முலைபொதிதோள்
சோதியின் வேழங்க ளாமணங் கேதொல்லை ராவணனைக்
காதிய வீரன் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பி
லேதியு நீலமு நீயுங்கண் ணுமென தின்னுயிர்க்கே.

## பாங்கி தலைவி யருமை சாற்றல்.

110. மாமேருப் பொன்னு மலயா சலந்தந்த வண்டமிழுங்
காமேன் மலர்க்குல மும்வெளி தாயினுங் காரரக்கர்
கோமேதை யேக்கிடும் வில்லான் குலோத்துங்கன் கோழிவெற்பா
யாமேயிவ் வண்ணஞ் சொலற்கரி யாளெங்க ளேந்திழைக்கே.

## தலைவ னின்றியமையாமை யியம்பல்.

111. தாரா தரமந்தச் சாதகந் திங்கட் சகோரமுண்ணச்
சேரா தொழியி னுயிருய்யு மோசெய்ய வேழமுய்யக்
கூராழி யன்றெறி கோமான் குலோத்துங்கன் கோழிவெற்பில்
வாராது மாதிருந் தாலணங் கேயெங்ஙன் வாழ்வெனக்கே.

## இதுவுமது.

112. தளத்தே புலிக்கொடி முன்னேவித் தானைபின் னேவித்தெவ்வைக்
களத்தே துரக்குங் குலோத்துங்கச் சோழன்கல் யாணிவெற்பின்
வளத்தே மொழியுங்கண் மங்கைதன் பேரை யருந்தியவென்
னுளத்தேசற் றுன்னினும் போமுயிர் மீளுவென் னேதுவதே.

## பாங்கி நின்குறை நீயே சென்றுரை யென்றல்.

113. வந்தார்க்கும் வண்டும் பறவையும் போதும் வளக்கனியுஞ்
சந்தாற் கொணர்ந்துண்ணு மோவண்ண லேதடங் கோடிதொறு
நந்தார்க்குங் காவிரி நாடன் குலோத்துங்க னுகைவெற்பிற்
செந்தார்க் குழலிக்கு நீயே விளம்புநின் சிந்தனையே,

### பாங்கியைத் தலைவன் பழித்தல்.

114. நாற்று ரணிபணி கோழிக் குலோத்துங்க னுடனையாய்
தேற்று தவட்கென் குறைகூறென் றுயென்ற தீயவுன்சொன்
மேற்றுவு வெய்யில் சுடும்போது காய்ந்தநெய்ம் மேல்விடலு
மாற்றுத புண்ணுக் கழல்வே னுழைத்தலு மாய்விட்டதே.

### பாங்கி பேதைமை யூட்டல்.

115. வெஞ்சா வுயிருக்குண் டாகவெய் தூணுண்ணும் வேடர்கன்னி
யஞ்சாளுன் சோர்வை யறிந்தண்ண லேகதி ராயிரந்தோய்
செஞ்சாலி யங்கதிர்த் தஞ்சைக் குலோத்துங்கன் சென்னிவெற்பி
னஞ்சா மரக்கனியி ன்னமு தாவதிந் நாட்டில்லையே.

### காதலன்றலைவி மூதறிவுடைமை மொழிதல்.

116. மீன்போத வெங்கண்ட கோழிக் குலோத்துங்கன் வெற்பனையாய்
தேன்போது சொல்லியைப் பேதையென் றுய்சிந்தை வாட்டமுடன்
யான்போதக் கண்டுகண் ணீருகுத் தாளின் புனத்தயனீ
தான்போதக் கண்டந்த நீர்துடைத் தாளிடைத் தானைகொண்டே.

### பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல்.

117. முன்னே திருவரப் பெற்றேரொருவர்தம் முன்புகழ்ந்து
பின்னே திருவென் றிரப்பர்கொல் லோபெருந் தாமரைச்செம்
பொன்னே புணருங் குலோத்துங்கச் சோழன் புகாரண்ணலே
மின்னேயுன் சோர்வறிந் தாற்பிறர் பாலென்கொல் வேண்டுவதே.

### தன்னிலை தலைவன் சாற்றல்.

118. எத்தா மரையும்பைந் தேனுக்குந் தேனல்கு மென்னுஞ்செவ்வி
மொய்த்தா யிரங்கதிர் தந்ததன் றேமுது பாவலவர்
புத்தா ரமுதங் குலோத்துங்கச் சோழன் புகாரனையா
ளொத்தாலு நீயன்றி யுண்டோ புணர்ப்பவ ரொண்ணுதலே.

### பாங்கி யுலகியலுரைத்தல்.

119. வாயிற் பலசொல்லி யென்னே வுனதுமெய்ம் மாண்பணிக்கே
யாயிற் பிறிதொன் றியம்புகின் றேனம்பு சாதமலர்க்
கோயிற் கொடிகொண்ட மார்பன் குலோத்துங்கன் கோழிவெற்பா
தீயிற் கரியினல் லாதிணங் காதெங்கள் தெய்வப்பொன்னே.

### உலகியலைத் தலைவன் மறுத்தல்.

120. மண்மேன் முகுந்தன் குலோத்துங்கச் சோழன் வயலுறங்கைப்
பெண்மேன் மணஞ்செய்து கூடுகென் றுய்பெருந் தீவயிற்றுக்
குண்மே விராப்பகற் கிட்டாது வாடு மொருவற்கந்த
விண்மே லமுதுவந் தோபசி தீர்ப்பது மெல்லியலே.

### இதுவுமது.

121. ஆறே யிழுக்கப் படுவார்க்கொ ரோட மமைப்பதற்குத்
தூறே செறிவனஞ் செய்வதொப் பாந்தொல்லை வாலியிரு
கூறே படக்கண்ட வில்லான் குலோத்துங்கன் கோழிவெற்பின்
மாறே யறிய மணஞ்செய்து கூடென்கை வாணுதலே.

---

## VEDANTA DESIKA.

## வேதாந்த தேசிகன் வைபவம்.

---

(340-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

ஈதிங்ஙனாக,—பிற்பட்டுத் திருவரங்கத் திருப்பதியின்கண் பல்லவாய மாயவாதி வித்வான்க ளொருங்கே குழுமி யாண்டுப் பரம ஸாதுக்களாம் வைணவ மணிகளை யண்மி யன்னாரைநோக்கி நீவிர் எமது வினாக்களுக்கேற்ற விடைகடாவுவிரேல் நும்மிராமாநுஜமதந் தலைப்படும். அன்றேல், மாறுபட் டெமது மதச்சார்பினராவதற்கிடனாம் எனப் பிரபல நிர்ப்பந்தானுஸாரிகளா யிருந்துழி, ஈதோர்ந்தாராய நம்மிராமாநுஜமதச் சார்பினராவா ரொன்று மோர்கதில்லாது தியங்கிச் சுதர்சனபட்ட ரென்பாரை யடைந்து தங்குறை யைச் செப்பலும், அஃதுணர்ந்தபட்டர்: வம்மின் உத்தம பிரம்மகுல மணி காள்! தியங்கன்மின். நீவிர் புரியற்பால தொன்றுளது :—அம்மாயாவாதி களின் கருத்தொழிக்க வல்லார் நந்தூப்பிற்பிள்ளையே; வேறுவாரின்றும். (மேலும், முன்னநங்குரவர் குலோத்துங்கமா வெழுந்தருளியிருந்த பாஷ்ய காரருந் தமக்குப்பின் நிகமாந்ததேசிகராவிர்ப்பவிப்பாரென வவரதுயுற்பத் தியாதி வரலாற்றினைச் செப்பிப்பின்னும் சின்னாட்களுள் "மாயாவாத த்வம்ஸகோளரி" யென்ற திருநாமத்தினையு மெய்தப்பெறுவா ரெனவு மறைந்தபோந்ததனைக் கேட்டிருந்த அம்மாளென்பாரது அனுக்கிரஹ விசே டத்தைக்கொண் டதிவிருத்தராக் கச்சியம்பதியில் ஸித்தாந்தப் பிரவசனஞ்செய்

தாய் எழுந்தருளியிருக்கின்றார்.) அம்மானுபாவனைக்கொண்டே நாம் நஞ் சித்தாந்தநிர்வாகஞ் செய்துகொள்ளக்கூடுமென, அங்ஙனேயவ்வைணவருந்தேறி செங்கோலராகிய திருவரங்கச்செல்வனார் சேனாபதியான விஷ்வக்ஸேனரது சாஸனமாக శ్రీమచ్ఛ్రీరంగనాథస్య విష్వక్సేనస్య శాసనం । తద్భృత్య భృత్య భృత్యానాం శిరోధార్యమనారతం ॥ என்றொரு திருமுகப்பட்டயத்தைக்கையேற்றவராய்ப் பிள்ளையிருந்த விடத்தேகி யன்னார்பா லீந்தவளவில், கவிதார்க்கிகஸிம்மமங் கிருபகுஸுமத்தைத் தஞ்சென்னியிற் சூடிப் பல்கால் மனப்பிரவணராயதித் வரையாய்த் திருவரங்கநகரையடைந்து உதகோத்கிருட்டமாங்காவிரியிலாடி திருக்கரம்பனூருத்தமனைத் தீர்க்காஞ்சலிபுரிந்து மீளவுங் கோயிலைக்கண்ணுறக் கண் டானந்தித்தவராய்,

> ஆராத வருளமுதம் பொதிந்த கோயி
> லம்புயத்தோ ரயோத்தி மன்னர்க் களித்த கோயில்
> தோராத தனிவீரன் றொழுத கோயிற்
> றுணையான வீடணர்க்குத் துணையாங் கோயில்
> சேராத பயனெல்லாஞ் சேர்க்குங் கோயிற்
> செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயிற்
> றீராத வினையனைத்துந் தீர்க்குங் கோயிற்
> றிருவரங்க மெனத்திகழுங் கோயிற் றனே.

என்றிதுபோன்ற பாசுராதிகளை யனுஸந்தித்துக்கொண் டிராநின்றுழி தம்மை (கோயிலாவோ ரொருங்கிண்டி மிகக்களியாட்டி லயர்ந்தாராய்த் திருவரங்க நாதனது திருமாலையாதியவைகளை யுகக்கொண் டட்டாவகைப் பல்லிய முழக்கினொடு) எதிர்கொண்டு நன்முகனியம்பி யிற்றலு, மிதனுள் முன்னங் கூறிய சுதர்சனபட்டரென்பார் திருமாலை யாதிகளைப் பிள்ளைபாலீந்து அன்னாரது பரிநாமங்களைக் கிளத்திக் கொண்டாடி ஸ்வாமின்; పరిత్రాణాయ సాధూనాం என்பது ஸம்ராட்டான ஸ்ரீமந்நாராயணனுக்காயினும் இங்ஙனம்விதேயர்களுக்காக் கொள்ளல் நுங்கடனா'; என்னையெனின்:-யானோ வயோதிகனுமசத்தனுமாயினேன். ஈண்டோ மாயாவாதிகளது கொடுமைகள் மிகாநின்றன. அன்னவைகளை யாற்றவிப்பா னுற்பவித்த நும்மையல்லாது எம்டோலியரா லாற்றவொண்ணு. அல்லாமலும், முன்ன மெம்பெருமானார் புரிந்தருளிப்போந்த ஸித்தாந்த ப்ரவசனம் போன்று தாமுமிங்ஙனமங்ஙனமாக்க நம்மழகிய மணவாள ரருளிப்போந்துள்ளாரென, வித்வன்மணியான ஸ்ரீநிகமாந்தகோளரியா ரந்நியமனத்தைச் சிரஸாவகித்து யானுய்ந்தேனெனச் சாலவும் ப்ரதக்கிணமாக் கோயிலுட்புக்காங்கு மடங் (ஸ௬௦) சொநிஞான முத்திராங்கரா வெழுந்தருளியிருக்கு மெம்பெருமானாரையும், ஆழ்வாராசாரியர்களையு நமஸ்கரித்து உடையவரது கடாக்ஷம் பெற்றாராய் மீளவுந் திருவரங்க நாச்சியாரை நமஸ்கரித் தட்சென் றரங்கனெம்பிரானது கருணைரஸார்

ணவமென வொளிருஞ் சந்திரபுட்கரிணியைத் தொழுது வலமிட்டுப் பலி பீடத்தருகே ஸேவித்து అస్మద్దేశికమస్మదీయం என்கிற ச்லோகத்தால் குரு பரம்பரானு ஸந்தானஞ்செய்து திருமணற்றூணருகே நின்று ஜகத்பிதாவும் ஸர்வேச்வரனும், ஸ்ரீயப்பதியுமான பெரிய பெருமாளையும், அழகிய மணவாளனையும் அமலனாதிப்பிரான்படியே கண்ணாரக்கண் டேற்றித்தொழுது ஈறிலின்பத்திருவெள்ளம் யான் மூழ்கினேன்’—என்கிறபடி பரவசராயிருந்தழி யரங்கத்தமுதனுவந்தருளி நீவிர் நம்மிராமானுஜனைக்கடுப்ப பரமபத நிரஸன பூர்வகமாக ஸ்வமதஸித்தாந்தத் தாபகஞ்செய்மினெனவருளி தீர்த்தாதிகளைப் பிரஸாதிப்பிக்கப் பிள்ளையானுய்ந்தேனெனத் தொழுதகையொடவைகளைப் பெற்றாராயங்ஙனே விஷ்வக்ஸேனரோடு பெரிய திருமண்டபத்தில் வீற்றிருத்தலும், முன்னஞ்சாற்றிய மாயாவாதிகள் மிக்க மனத்தழுக்கா றடைந்து பிள்ளையொடு ஒருவாரங்காறும் வாதிட்டுத்தோற்றாராய் வேறுவகையின்றிப் பிள்ளையின் திருவடிப்போதுகளி லிடையறாது ப்ரவணராய்க்கிடந்தனர். இன்னணமவ்வெழுநாட்களு நிகழ்ந்த வாதானுவாதங்களைக்கொண்ட பட்டோலையைப் பேரருளாளையர் எட்டாநாள் பிள்ளைபாணிட்டலும், அவைகளை யுற்று நோக்கிய பிள்ளை யிதற்குச் சததூஷணி யென்ற பெயர் சூட்டினோம் என்னலும், அவ்வரங்கநாதனு நன்கேயுவந்தருளி நிகமாந்தாரியனை நோக்கி,—‘நீவிர் நமது ஸ்ரீயப்பதித்வாதி குணநிரூபகமான இராமானுஜ ஸித்தாந்தத்தை நிலைப்படுத்தி வைரிகளை நிராகரித்தமையால் நம்மொருவருக்கே வுரித்தாகிய ‘வேதாந்த தேசிகர்’ என்ற திருநாமத்தை யின்றுதொட்டு நீவிரேபெறக்கடவீரெனச்சாற்றித் திருமாலைத் திருப்பரிவட்டமாதியவைகளை யளிப்பித்து உபய வேதாந்தங்களையும் ப்ரவசனம் பண்ணிக்கொண் டீண்டிருமென, (ஈதுணர்ந்த சுதர்சனபட்டராதியோர்களும் பெருமானியமனத்தை யீடேற்ற வேண்டுமென) அங்ஙனே யாகுகவென் றரங்கநாச்சியாரைத் தொழ, நாச்சியாருமின் ஞாதுஸித்தாந்த நிர்வாகத்தையும், பெருமான் ப்ரஸாதித்ருளிய திருநாமத்தினையுங்கண்டு சாலவும் வியந்து பிள்ளையை விளித்து ‘தந்திர மனைத்தினையும் வல்ல நுமக்கு யாம் ‘ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்’ என்ற நவநாம மருளினம் கொண்மின்’ என்னலும், சுதர்சனபட்டராதியோர் பேரானந்தங்கொண்டாட கிருதார்த்தராய்த் தமக்காக்கிய விடுதியிலெழுந்தருளி யிருந்தனர்.

பின்பொருநா ளித்திருவேங்கட நாதாசாரியர் துயின்றிருந்துழி யின்னவரது கனவின்க ணுடையவ ரெழுந்தருளி குளிரக் கடாக்ஷித்து ப்ரபலமாய திருமந்திர மந்திரார்த்தங்களையும். ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயங்களையும் ப்ரவசனஞ்செய்துகொடு இவ்வர்த்தங்களனைத்தையு மொருங்கே சுப்ரதிட்டிதமாப் பெற்று நுமக்குப் பிற்பட்டோ ருய்யப்பாலதாய பல ப்ரபந்தரத்நங்களை யியற்றக்கடவீரென வாக்ஞா பூர்வகமாக வாசிகூறிக் கரந்தருளினர். அக்கனவே நனவாக்கொண்ட நந்தேசிகனார் சடக்கெனத் துயிலாற்றித் தாமாப் புன்முருவல்பூத்து ஆசிரியத்தவுத்தியஞ் செய்துகொ டவ்விரவை நீத்து வைகறை

யாமத்துச் செய்கடைத்தடஞ்சென் ருங்கண் டமக்குரிய காலக்கடன்களை
முற்றவாற்றி யாண்டிருந் துடையவ ராலயம்புக் காங்குள வெம்பெருமானு
ரது திருவடிப்போதுகளி லட்டாங்க ஸஹிதம்பிரணமஞ்செய் தன்னாரது திவ்
யமங்கள விக்ரஹத்திலுந் திவ்யமங்கள சேட்டிதங்களிலு மீடுபட்டுப் பரவச
ராயிருந்தனர். அன்னவமயம் உடையாரது சைத்திரமதித் திருவிழாவாயிரு
ந்தது பற்றிச் சேவாபேக்ஷிதர்களாய தூப்பிற்பிள்ளையைக் கிட்டி வந்தனபூர்
வமாவவரை நோக்கி ‘அடியோங்களது மனத்தும் நம்போன்ற வனுபவம்
விறுவுமாறு தகைமைசான்ற சுதந்தரமொன்றனை யருளிச்செயவேண்டு’மென்
றிரங்கலும், ஆண்டிருந்தே வேதாந்த தேசிகனாருங் கடல்புடைஞாலங்களி
பேருவகை பூப்ப வையந்திரிபற யாவரு மொப்ப யதிராஜஸப்ததி யென்ற
திவ்ய கிரந்தமொன்றனைச் சாற்றுவிற்றலு, மிதனது நிர்த்துட்ட ப்ரபாவாதிக்
கமோர்ந்த நம்மெம்பெருமானார்ப்பேரானந்த மெய்தியவராய்ப் பிள்ளையைச்சா
லவுமுவந்து முதனாளிரவேபோன்று ஆசிசொற்று தீர்த்தர்திகளைப்பிரஸாதிப்
பித்தலும் மங்கிகரீதரான தேசிகனாரவ்வாக்கியினுக்கிணைப்படியே பரமபதநிர
ஸநமும், ஸ்வமதத்தாபனமுமாக தத்வமுக்தாகலாபம் என்ற நூலையும், அதன்
வ்யாக்யானமான ஸர்வார்ஹஸித்தியையும், ஞாயஸித்தாஞ்சனம், ஞாயபரி
சுத்தி, ஸேச்வரமீமாம்ஸை, மீமாம்ஸாபாதுகை, ஸ்ரீபாஷ்யவிவரணமான
தத்வாடிகை, அதிகரணதர்ப்பணம், அதிகரண ஸாராவளி, ஸ்ரீகீதாபாஷ்ய
விவரணமான தாத்பர்யசந்த்ரிகை, ஈசாவாஸ்யோபநிஷத்வ்யாக்யானம்,
ஸச்சரித்திராக்ஷை, ஸ்ரீபாஞ்சராத்ராக்ஷை கீதார்த்தஸங்கிரஹரக்ஷை, நிக்ஷே
பரக்ஷை, ரஹஸ்யரக்ஷை, ஹரிதினதிலகம், பூகோளநிர்ணயம், பூகோளநிர்
ணயவ்யாக்யானம் ஆகிய எனைய கிரந்தரத்னங்களைச் செய்தருளி யுடையவரது
திருவுளக்கருத்தைப் பிரகாசிப்பித்துக்கொண் டெழுந்தருளியிருந்தனர். பின்
னர், ஸ்ரீஸ்துதி, பூஸ்துதி, நீளாஸ்துதி, தசாவதாரஸ்தோத்திரம், ஆகிய இவைக
ளைச்செய்தருளினர்.

(இன்னும் வரும்.)

கே. இரங்காசாரியர்.

# EDITORIAL NOTES.

# பத்திராதிபர் குறிப்புக்கள்.

---

**ஞானமேனும் ஐசுவரியம்:—**

பூர்வத்தில் வேதாதிகாரிகளான உர்க்கதரிசிகளினாலும், ரிஷிகளினாலும், பின்னர்ப் போந்த மகாத்துமர்களான அநேக ஆசார்யர்களினாலும், ஞானிகளினாலும் ஆஸ்தியென வைக்கப்பட்டுள்ள ஞானைசுவரியத்தை ஸ்வீகரிப்பது எப்போழ்தும் மிகுந்த உத்தரவாதத்திற்கிடமான காரியமாகவே இருந்திருக்கவேண்டும். ஆயினும் நம் தேசத்துச் சரித்திரத்திலமைந்துள்ள சில சந்தர்ப்ப விசேஷங்களினால் மேற்சொல்லிய பொறுப்பின் பளுவு எப்போழ்தினும் இப்போழ்து மிகவும் அதிகமாகின்றது. காலம் மாறியிருக்கின்றதென்பது நாமறிந்த விஷயமேயன்றோ? காலத்தின் வேற்றுமைக்குக் காரணம் நம்மையாளும் அரசனேயாவன். "ராஜா காலஸ்ய காரணம்" என்று மகாபாரதம் போதிக்கின்றதன்றோ? மகமதியர் இந்தியாவுக்குவந்து இங்குத் துரைத்தனம் நடத்தியதுமுதல், ராஜநீதியென ஹிந்து தர்ம சாஸ்திரங்களிற் கூறப்படும் பழைய சட்டதிட்டங்கள், க்ஷத்திரியர்கள் இந்நாட்டில் அரசுசெலுத்திய காலத்திலிருந்ததுபோல, அனுஷ்டிக்கப்பட்டில. தற்போது நமது சக்கிரவர்த்தியோ கிறிஸ்துமதத்தவராவர். ஆகலின் ஆங்கிலச் சட்டமானது ராஜகீய கட்டுப்பாட்டு விஷயத்தில் இந்தியர் தர்மசாஸ்திரத்தை யனுசரித்திருக்கவில்லை. இது தற்காலத்து ராஜதந்திரத்துக்கானதொரு குறையென யான் கூறப்போந்தவனல்லேன். இஃதொரு குறையாகாது. யோசித்துப் பார்க்குமிடத்து, இந்தியாவிலமைந்துள்ள ஆங்கில ராஜநீதிக்குரிய மதப்பற்றற்ற தன்மையும் சாஸ்திரத்திற்கியைந்த லௌகிக லக்ஷணமும் நமது தற்போதிய நிலைமையில் நமக்கு அதியாவசியமானவையென நாம் வியப்புறக்கடவோமென நீங்களே தெளிவீர்கள். இத்தனை நான் இங்கெடுத்துக் கூறுவதன் கருத்து, இவ்வாறு மதத்தினின்றும் ஸமூகக் கட்டுப்பாட்டினின்றும் ராஜகீயம் வேறுபடுத்தியதனால் குடிகளின் மதத்தையும் ஸமூகச் சீரையும் ஒழுங்காய்ப் பாதுகாப்பது அந்தக் குடிகளின் கடமையே யாகின்றதென்பதை விளக்குவதேயாம். இப்பொழுது அவர்கள் அந்தக் கடமையை ராஜாங்கத்தாரது சகாயம் சிறிதுமின்றி அதிகாரப் பாங்கின்றித் தாங்களே செய்து நிறைவேற்ற வேண்டியிருக்கின்றது.

* * *

**நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் யந்திரங்கள்:—**சென்ற வருஷத்தில் நூதனமாய்ச் செய்யப்பட்டிருக்கும் யந்திரங்களுள் 62-இருப்புப் பாதை சம்பந்தமாய் செய்யப்பட்டவைகள். 21-மின்சார விசை சம்பந்தமுள்ளவைகள். 17-தேயிலைச் சம்பந்தமுள்ளவைகள். 13-நாரெடுக்கும் யந்திரங்கள். 10-பங்கா ஆட்டுங் கருவிகள். 2-அவுரியிலிருந்து சாயமெடுக்கும் தொழில் உபயோகமாகக் கூடியவைகள். அவ் யந்திரங்களைப் பதிவு செய்வதற்காக 1901௵த்தில் கிடைத்ததுபோலச் சென்ற வருஷத்தில் கவர்ன்மெண்டாருக்கு ரூ. 45,000 கிடைத்தது.